விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

உற்சாகத்தை அளிக்கவல்லது
அண்ணா கோப்பி
மின்சார ரோஸ்டரில்
உங்கள் முன்னிலையில் வறுத்து
அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவுகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
விஜயம்செய்யுங்கள்
அண்ணா கோப்பிக்கடை
இல. 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR

"மில்க்வைற் நீலசோப்"

திருப்திகரமான சலவைக்கு மில்க்வைற் நீலசோப் வாங்கி உபயோகியுங்கள்!
100 நீலசோப் மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் அப்பியாசக் கொப்பி ஒன்றை அல்லது அழகியபொலித்தீன் பாக் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்·யாழ்ப்பாணம்

மலர் 21 ஆனி 17 ஷஃபான் 5 ஞாயிற்றுக்கிழமை (1—7—79) இதழ் 139

# அனுமதிப்பத்திரம் பெருத வாகனங்களுக்கு பெற்ரேல் டீசல் இல்லை

## அடுத்த வாரம் பங்கீட்டு அமுலுக்கு வருகிறது

(கொழும்பு)

பங்கீட்டு அட்டை மூலம் வழங்கப்படவுள்ள பெட்ரோல், டீசல் ஆகியன இவ்வாண்டிற்கான அனுமதிப் பத்திரம் பெறாத வாகனங்களுக்கு விநியோகம் செய்யப்படமாட்டாது என மோட்டார் போக்குவரத்து திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாவனைக்கு உகந்ததல்ல என்று காரணம் காட்டப்பட்ட சுமார் 6 ஆயிரம்வாகனங்கள் இன்னமும் 1979ம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெறவில்லை. என்றும் இவ்வாகனங்களுக்கு பெட்ரோல், டீசல் ஆகியன வழங்கப்படமாட்டாது என் [illegible] தெரிவித்தன.

பங்கீட்டு அட்டைகள் தயா[illegible]

## யாழ். நகரில் கலாச்சார அமைச்சர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள கலாச்சார அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருள்ளே நேற்று யாழ். நகரில் நடைபெற்றுவரும் "அப்பாலோ" சர்க்கஸ் நிகழ்ச்சிகளின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

திரு. ஹுருள்ளே நேற்றுக் காலை காரில் யாழ்ப்பாணம் வந்தார், இவருடன் தொல்பொருள்துறை ஆணையாளர் டாக்டர் ஆர். எச். டி. சில்வா, பிரதித்தொல்பொருள் ஆணையாளர் டாக்டர் எஸ். கருண

[10-ம்பக்கம்பார்க்க]

## ஓவியர் மஞ்சுசிறி எவ்வாறு காயமுற்ருர்

### பொலிஸ் அதிபர் தரும் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

பிரபல சிங்கள ஓவியர் மஞ்சுசிறி யாழ்ப்பாணத்தில் வைத்து காயமடைந்தது எப்படி? தாக்கப்பட்டிருவரா? [illegible]

இச்சம்பவம் பற்றி இப்பொழுது இந்தக்கேள்வி எழுப்பப்படுகின்றது.

திரு. மஞ்சுசிறி சைக்கிள் ஒன்றினால் அடிபட்டுக் காயமுற்றதாகவே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது தெரிவிக்கப்பட்டுள்ளது. என்றும் ஆனால் யாரோ இனந்தெரியாத ஒருவரால் தாக்கப்பட்டு காயமுற்றதாக கொழும்பு பொலிஸ் [illegible] றும் இப்பொழுது அறியப்படுகின்றது.

மஞ்சுசிறியைத் தாக்கியவர்களை கண்டுபிடிக்க உதவும்படி கோரி எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர்விடுதலைக்கூட்டணி செயலதிபருமான திரு.

(10-ம் பக்கம் பார்க்க)

## "தவருன தகவல்களே பரப்பப்பட்டன"

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் ஓவியர் மஞ்சுசிறி தாக்கப்பட்டது தொடர்பாக தவருன தகவல்களே இலங்கை முழுவதும் பரப்பப்பட்டுள்ளன. இதன் பின்னணியில் உள்ள தீய சக்திகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்"

இவ்வாறு யாழ். இளைஞர் வட்டத்தின் செயலாளர் திரு. வ. ஜ. ச. ஜெயபாலன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்த 14ந் திகதி கஸ்தூரியார் வீதியில் சிறுவன் ஒருவனது சைக்கிள் வண்டியில் மோதுண்டு தலையில் காயம்

(10-ம் பக்கம் பார்க்க)

உணர்ச்சிக் கவிஞர்
திருமண அழைப்பு
மணமகன்: கவிஞர் காசிஆனந்தன்
மணமகள்: செல்வி சி. சரோஜினிதேவி
(மட்டுநகர் திரு செ. சீனித்தம்பி அவர்களின் திருநிறை புதல்வி)
நாள்: 6-7-1979 வெள்ளிக்கிழமை
● நண்பகல் 12 மணி - தொண்டைமானாறு செல்வச்சன்னதி முருகன் கோவில் - இறைவழிபாடும், தாலி புனைதலும்.
● மாலை 5 மணி - யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம். தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் மணமக்களுக்கு வரவேற்பு விழா.
விழாவில் தலைவர்கள் வாழ்த்துரையும், கலைஞர்கள் நாதஸ்வர இசையும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
க. சச்சிதானந்தனும் பாரியாரும்
மறவன்புலவு, சாவகச்சேரி.
(திருமணவிழாக்குழு சார்பில்)
குறிப்பு:- தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை
2907

## அரச ஊழியர் விடுமுறைகள் 1980 முதல் அரைவாசியாகும்

[கொழும்பு]

அரசாங்க ஊழியர்களின் விடுமுறை தினங்கள் அடுத்த ஆண்டு ஜனவரிமுதல் அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அரசஊழியர்களுக்கு இனிமேல் வருடாந்தம் 21 நாட்கள் மட்டுமே லீவு வழங்கப்படும்.

ஆசிரியர்களுக்கு பாடசாலை தவணைவிடுமுறைநாட்களுடன் 21 நாட்கள் விடுமுறை வழங்கப்படும்.

இவற்றுடன் பொதுவிடுமுறை தினங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

ஐந்து சமய விடுமுறைகளும் நான்கு சமயசம்பந்த மற்ற விடுமுறைகளுமாக 9 பொதுவிடுமுறைகள் வழங்கப்படும்.

புத்தசமய விடுமுறை 2நாட்களும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் சமய விடுமுறைகளாக தலா ஒருநாளும் வழங்கப்படும்.

தேசிய தினம்-பெப்ரவரி 4, தமிழ்-சிங்கள புத்தாண்டு-ஏப்ரல் 13, 14, மே தினம்-மே 1 ஆகியவையே ஏனைய சமயசம்பந்தமற்ற பொதுவிடுமுறைகளாகும்.

இதே வேளையில் தனியார் துறையினரின் லீவுநாட்கள் குறித்து அரசாங்கம் தீர்மானிக்கமாட்டாது என்று அறிவிக்கப்ப[illegible]

இன்று (1-7-79) யாழ் நகரில் கடைசி இரவு
அகாபே போர்ஸ் அளிக்கும்
மை பிறதர்ஸ் கீப்[illegible]
(My Brother's Keeper)
யாழ் திறந்தவெளி அரங்கில் மாலை 6 00 மணிக்கு [illegible]
விசேட பாடல்கள். அற்புதமான நற்செய்தி. வியாதியஸ்தர்களுக்கான விசேட ஜெபம் [illegible]
வேறு விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
அசெம்பிளி ஒப் கோட்,
இராசாவின்தோட்டம் றோட், (தொலைபேசி:7417) யாழ்ப்[illegible]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

33 ஸ்ரீ பெட்போட் வான் (Bedfort Van) விற்பனைக்கு உண்டு. சஸ்வரன் மோட்டார் வேக்ஸ், 62, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தில் பார்வையிடலாம். காருடனும் மாற்றலாம். 2909

பாவித்த உரப்பைகள், விற்பனைக்குண்டு. வேலை நாட்களில் மட்டும் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 2897

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள், கல்வயலில் நுணுவில் சரசாலை ஜேட்டிற்கு கிட்டியதாக 6½ பரப்பு வீடுகட்டக் கூடிய காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு கி. விஸ்வநாதன் பொற்பதிரோட் கொக்குவில் 2888

8 ஸ்ரீ 4000 தொடர் இலக்க மொறிஸ் ஒக்ஸ்போட் கார் விற்பனைக்குண்டு. திங்கள் கிழமை பார்வையிடலாம். விபரங்களுக்கு: 21/1 ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 2918

சிறிய வீட்டுடன் 16 பரப்புக் காணி ஆனைக்கோட்டையில் பஸ்வண்டி செல்லும் ஆலடி ரோட்டில், பகுதியாகவோ, முழுதாகவோ விற்பனைக்கு உண்டு. த. கணேசன் 9-10ம் ஒழுங்கை, கொக்குப் பிட்டி அவர்களுடன் தொடர்பு கொள்க. 2894

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைவீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் சுற்று மதில், கிணறு ஆகியவற்றுடன் வீடு அரைவாசி கட்டிய நிலையில் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: S. ஆறுமுகம், 411/2, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 2920

## தேவை

பேனா நண்பராகச் சேர்ந்து கொள்ள எட்டு 25 சத முத்திரையுடன் பெயர் விபரங்களை அனுப்பி சேர்ந்து கொள்ளுங்கள். பேனா நண்பர் பகுதி மா. லோகநாதன் இல 47, வராத்துப்பளை பருத்தித்துறை. 2913

பருத்தித்துறையில் உள்ள வைத்தியசாலை ஒன்றிற்கு பெண் உதவியாளர் தேவை. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும் 5ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 2914 C/o ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம் 2914

## கல்வி

ஒரே மாதத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க "Spoken English" விலை 12-50 V. P. P உண்டு. 77, Center Road, Mattakkuliya. 2912

30 நாட்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க, முப்பது நாட்களில் ஆங்கிலம் (தமிழ் மூலம் ஆங்கிலம்) பலவிடயங்களுடன் வெளிவந்துள்ள இரண்டு புத்தகங்கள் 20/- V P P உண்டு தொடர்புகளுக்கு: M J Fernando 103, Church Road, Mattakkuliya. 2911

## பயிற்சி

விசேட 3 மாத மோட்டார் மெக்கானிக்டிப்ளோமா பயிற்சி 10-07-1979 ஆரம்பமாக வுள்ளது. இன்ஸ்ரிரியூட் ஒவ் இன்ஜினியரிங் ரெக்னோலொஜி 11/B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2901

## தவறிவிட்டது

27-6-79 மாலை 5-30 மணி வரையில் பண்ணை புதிய பஸ் நிலையத்துக்கு அண்மையில் கார் சாவி தவறிவிட்டது இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து M M T P. 142 ஆஸ்பத்திரி வீதியில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2919

## சீமெந்து விநியோகம்

சீமெந்து பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் தபால்மூலம் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் கிடைத்து 04 வாரங்களுக்குள் பாவனையாளர்களுக்கு சீமெந்து விநியோகிக்கும் திகதி அறிவிக்கப்படும்.

தொழிற்சாலை முகாமையாளர்
2877

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 23ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

உற்சவத்தின் இறுதி நாளான நாளை திங்களன்று விசேட பூசைகளும், கலை நிகழ்ச்சிகளும் பூந்தண்டிகையில் அம்பாள் வீதி உலாவரும் நிகழ்ச்சியும் நடைபெறும். (கா)




2904

"கிராம அபிவிருத்திக்கென

# வழங்கப்படும் நிதியை நன்கு பயன்படுத்த வேண்டும்"

(சங்கானை)

"விவசாய உற்பத்தி, சிறுகைத்தொழில்கள், கடற்றொழில் போன்றவைதான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அத்திபாரமாக அமைவது. இவற்றிற்கு உறுதுணையாக கிராமங்களில் சகல துறைகளும் வளர்ச்சிபெற வேண்டும் இந்த நோக்கிலேயே தொகுதி அபிவிருத்திகளுக்கென அரசினால் வழங்கப்படும் பணத்தை நாம் நன்கு பயன்படுத்தி முன்னேற்றம் அடையச் செய்வதவசியம்"

இவ்வாறு வட்டுக்கோட்டை எம்பி திரு. தா. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டைத் தொகுதி அபிவிருத்திபற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

சங்கானை கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கடந்தவருடம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் சிரமதானமூலம் குளங்கள் திருத்தப்பட்டும் வீதிகளும் அமைக்கப்பட்டன ஆனாலும் மீதமாக இன்னும் 29 குளங்கள் திருத்தப்படவுள்ளன. இதற்கு மனித சக்தி பயன்படுத்தப்படல் வேண்டும் கூடுமான அளவுநீரைத் தேக்கிவைப்பதால் இப்பகுதி உவர் நீர் தன்மை குறைவதுடன் கிணறுகளில் நீர் ஊற்றும் அதிகரித்து விவசாயத்திற்கு நன்மைபயக்கும்.

சிறுகைத்தொழில் போன்றவற்றில் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம் ஆரம்பித்த அன்னதிட்டத்தினால் படித்த வாலிபர் யுவதிகட்கு வேலை வாய்ப்புக்கிடைப்பதுடன் உற்பத்தியும் பெருகவாய்ப்பாக அமைந்துள்ளது.

இதேபோல் ப. நோ. கூ. சங்கங்களும் கைத்தொழில் போன்றவற்றை ஸ்தாபித்து படித்த இளைஞர், யுவதிகள் மத்தியில் நிலவும் வேலை இல்லாத் திண்டாட்டத்தை தீர்த்து லாபத்தைப் பெருக்க வேண்டும்.

வலி-மேற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் பேசுகையில், தற்பொழுது 16 குளங்கள் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைக்குட்பட்ட வீதிகள் திருத்தி அமைத்தமையும் மெச்சத்தக்கதாகும். நாம் கடமைகளைச் செவ்வனே நடாத்துவோமேயானால் எமது தேவைகள் செவ்வனே நிறைவேறும்" என்றார்.

சிரேஷ்ட மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நடராசா, வலி-மேற்குப் பகுதி கிராம அபிவிருத்திச்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் இலாகா உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (கு)

## இராமாயண விரிவுரை


(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி, தலங்காவற் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அடுத்தமாதம் 13ம் திகதி வரை நடைபெறவுள்ள உற்சவத்தில் தினமும் காலை ஸ்ரீலஸ்ரீ பரமசாரிய சுவாமிகள் சம்பூர்ண ராமாயண விரிவுரை நிகழ்த்தி வருகிறார். (கு)

## பிரசுரங்கள் விநியோகம்

(வேலணை)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய நடைமுறைகளையும் நிர்வ[illegible] சீர்கேடுகளையும் சுட்டிக்காட்டி அனாமதேய துண்டுப் பிரசுரங்கள் வேலணையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. சங்கத்தின் உத்தியோகத்தரின் நியமனங்கள்; உபவிதிகளுக்கும், படிவ நடைமுறைக்கும் முரணாக இருப்பதாக அத்துண்டுப்பிரசுரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (கு)



உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலையில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற கலைமகள் இல்லத் தலைவன் செல்வன் கலைச் செல்வனும் இல்லத் தலைவி செல்வி கஸ்தூரியும் தமது இல்லத்துக்கான வெற்றிக் கேடயத்துடன் காணப்படுகிறார்கள்.

## கி. அ. சங்கத்திற்கு புதியகட்டிடம்

(ஊரெழு)

ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்குச் சொந்தமாக புதிய கட்டிடமொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் அண்மையில் நடைபெற்றது. ஊரெழு விரகத்தி விநாயகர் ஆலய வீதியில் அமையவிருக்கும் சங்கத்தின் புதிய கட்டிட வேலைகளுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து 10,000 ரூபாவை கோப்பாய் எம். பி. திரு. கி. கதிரவேற்பிள்ளை ஒதுக்கியிருந்தார். (கு)

# "மக்கள் காட்டிய அன்பை மறக்க முடியாது"

## — பேராசிரியர் அழகப்பன்

(யாழ்ப்பாணம்)

கடந்த 40 தினங்களும் மக்கள் காட்[illegible] அன்பு உணர்ச்சியை எ[illegible] என்றுமே மறக்க முடியாது. மக்களோடு இரண்டறக் கலந்து உறவாட இன்றைய அரசு பாதை அமைத்துவரும் இவ்வேளையில் தமிழிசை, தமிழ் நாடகம் வரவும் இலங்கைத் தமிழ் நூல்கள் தமிழகத்துக்குத் தட்டுப்பாடின்றி வரவும் நல்ல தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கப் பலதிட்டங்கள் தேவை. சீதனம், தீண்டாமை ஒழிப்பிற்கு ஈழத்தின் பல பெரியார்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு கடந்த 40 தினங்களாக இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைப்பேராசிரியர் டாக்டர். ஆறு அழகப்பன் நேற்று தாயகம் திரும்பு முன் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பல்கலைக்கழக ஆசிரியன், எழுத்தாளன், நாடக ஆசிரியன், உல்லாசப் பயணி என்ற வகையில் எனது நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

பேரறிஞர் அண்ணா சிங்கப்பூருக்குச் சுற்றுப்பயணம் செய்திருந்தபோது அங்கு வாழுகின்ற மலாய் இனத்தவர்களை வெற்றிலையாகவும், சீனர்களை பாக்காகவும், தமிழர்களை சுண்ணாம்பாகவும் உவமையாக கூறி அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு மூன்று இனத்தவர்களும் தேவை என்றார் அப்பேரறிஞரின் கூற்று சிங்கப்பூரை முன்மாதிரியாகவைத்து வாழும் இலங்கைக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை. (கு)

# புதிய அடையாள அட்டைகளை விவசாயிகள் பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளுக்குப் புதிய விவசாய அட்டைவழங்குவதற்கான நடவடிக்கைகள் கமத்தொழில் சேவைத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இவ்விவசாய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்காக எதுவித கட்டணமும் விவசாயிகள் செலுத்தவேண்டியதில்லை என்றும் இதற்கான அடையாள அட்டையின் புகைப்படத்தை எடுப்பதற்கான நடவடிக்கைகள் ஒவ்வொரு கமநலசேவை நிலையத்தினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் புதிய விவசாய அடையாள அட்டை[illegible] வேண்டிய எல்லா

(10-ம் பக்கம் பார்க்க)



# இழப்புக்கள்

தாமரைச்செல்வி



கோட்டை புகையிரத நிலையம் கலகலக்கிறது கையில் ஒரு சூட்கேசுடன் மகேசன் வேர்த்து விறுவிறுக்க ஓடிவந்தான். யாழ்ப்பாணம் போகும் வண்டி மேடையில் வந்து நின்றது. அது நிற்கும்வரை பொறுமையில்லாத ஜனங்கள் கம்பிகளில் தொற்றிக்கொண்டு வண்டிக்குள் பாய்ந்தார்கள்.

மகேசனும் பாய்ந்து ஏறினான். ஏறிய வேகத்தில் யன்னலோரம் இருக்கை கிடந்தது. சாதனை செய்த குதூகலத்துடன் அமர்ந்துகொண்டான். யன்னல்மூலம் வெளியே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தான்.

பதினொன்று ஐம்பத்திஐந்து...

வண்டி நகர்ந்தது. வேகம் பிடித்து ஓடியது.

வண்டிக்குள் ஆட்கள் நிறைந்துபோயிருந்தார்கள்.

ஆட்களை விலக்கிக்கொண்டு வந்த சுந்தரம், அவனைக்கண்டதும் 'என்ன அரைநாள் லீவோ—' என்றான்.

'ஓமடா, மெயிலில போகேலாது இதில போனால் இரவுக்கு வீட்டைபோய் நிம்மதியாய் நித்திரை கொள்ளலாம்.'

'உனக்கென்ன... நீ எட்டு ஒன்பதுக்கெல்லாம் வீட்டை போயிடுவாய், எங்கள் பாடுதான் கஷ்டம். யாழ்ப்பாணம் டவுணுக்குப்போய் பஸ் எடுத்துப்போகவேணும்; றெயில் லேட் என்டால்ஐஞ்சு கட்டை நடையாய் நடக்கவேணும்.' -சிறிதுநேரம் நின்று பேசிக்கொண்டிருந்தான்-

'நீ கொஞ்ச நேரம் இரு—' என்று மகேசன் எழுந்தான்.

'வேண்டாம் நீ இரு. நான் இப்படியே ஒரு வட்டம் சுத்திப்போட்டு வாறன்.'

'ஆக்களில இடியாமல் கவனமாய்ப் போ—'

அந்தக் குறும்பில் சிரிப்பு வழிய—

'இன்ரஸ்ட் இல்லையே' என்ற சுந்தரம், போகத் திரும்பினான்.

தோளில் இடிவாங்கிய இவப்பு போல் ஸாக்கு 'சொறி' சொல்லிவிட்டு நகர்ந்தான்.

பின்னணியிலுள்ள முறைப்பைப் பொருட்படுத்தாமல் சுந்தரம்போய் மறைவதை ரசனையுடன் பார்த்துக்கொண்டிருந்த மகேசன், திரும்பவும் தன் பார்வையை வெளியே திருப்பினான். சுந்தரத்தைப் போல ஒருகாலம் அவனும் இருந்திருக்கிறான். எந்தப் பொறுப்புமில்லாமல் இனிமையாக பொழுதை கழித்திருக்கிறான்.

ஆனால் இப்போது...

மனைவி, குழந்தைகள், குடும்பம் என்று வந்ததும எவ்வளவு மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

ரமா, பொல்காவலை, குருநாகல் என்று ஒவ்வோரிடமாக வண்டி ஓடிக்கொண்டிருக்கையிலேயே அவன் மனம் தன் வீட்டுக்குப் போய்விடுகிறது.

அந்தச் சின்ன வீட்டுக்குள் அவனது வரவை எதிர்பார்த்துக்கொண்டு கமலாவும் இரண்டு செல்வங்களும் காத்திருப்பார்கள். அவர்களைப் பார்த்து இரண்டு மாதமாகிறது மனைவியின் அழகான விழிகள்...அவளது கரம்படைக்கும் அறுசுவை உணவு... அவளது அன்பு... எல்லாவற்றையும் அனுபவித்து இரண்டு மாதமாகிறது. குழந்தைகளின் மழலை காதிலொலித்து இரண்டு மாதங்கள்...மனம் தாங்க முடியாமற் கனத்தது.

இந்த இரண்டு மாதங்களுக்கு எவ்வளவு இன்பங்களை... குதூகலங்களை... சந்தோஷங்களை... இழந்துவிட்டிருக்கிறோம் என்று நினைக்கையில் தொண்டையை வேதனை அழுத்தியது. அவனுடைய முன்னூற்றி ஐம்பது ரூபாய் (சில வேளைகளில் நானூறு) சம்பளத்தில் அவர்களையும் கொழும்பில் கூட்டிவந்து குடும்பம் நடத்துவது முடியாத காரியம், ஊரில் விட்டுவிட்டு அடிக்கடி வரவும் முடிவதில்லை. இரண்டு மூன்றுமாதங்களுக்கு ஒருதடவைதான் வரமுடிகிறது-

இடைக்காலங்களை அவன் கொழும்பில் தனிமையில் ஏக்கச் சுமைகளுடன்தான் கழிக்க வேண்டியிருக்கிறது.

அனுராதபுரத்தில் பத்து நிமிஷங்கள் வண்டி நின்றுவிட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்தது. அவன் மனம் வாட அமர்ந்திருந்தான். தான் போனதும் மலரப்போகும் அவர்களது முகங்களை நினைவுபடுத்திப்பார்த்தான்.

அவர்களுடன் தான் முன்பு இருந்த நேரங்களில் நடந்த ஒவ்வொரு சம்பவங்களும் அவன் நினைவுக்கு வந்தன...

சின்னச் சின்ன ரசமான சம்பவங்கள்...

மறக்கமுடியாத நினைவுத் துளிகள்...

கொடிகாமத்தில் வண்டி நின்றபோது எட்டுமணி...

நிலையத்தருகிலேயே பருத்தித்துறை பஸ் காத்திருக்கும். அதில் இடம் பிடிக்க ஓடும் கூட்டத்தோடு அவனும் ஓடினான்.

வெளியே இருட்டில் கல் இடறியது. பஸ்ஸில் ஏறிக்கொண்டான். இருக்க இடம் கிடைக்கவில்லை, உட்கார்ந்திருந்தவர்கள் முன்பு 'செற்றும்' போட்டியில் பரிசு வாங்கியவர்களாய் இருக்க வேண்டும், அவனை முந்திக்கொண்ட அதிர்ஷ்டசாலிகள்.

பஸ்ஸுக்குள் ஆட்கள் அடைந்து ஒருவர் மூச்சு ஒருவர் தோளிலோ முகத்திலோ படுமளவுக்கு நிறைந்தபோது தான் பஸ் புறப்பட்டது.

இவ்வளவு நேரமும் பொறுத்து விட்டோம்; இந்த அவஸ்தையைத் தான் பொறுக்க முடியாதா? என்பது போல, அந்த நெருக்கத்தைப் பொருட்படுத்தாமல் வீட்டின் நினைவுகளுக்கு தாவிவிட்ட உயிர்ச் சுமைகளைச் சுமந்து கொண்டு பஸ் ஓடியது.

சுட்டிபுரம் அம்மன் வாசலில் பஸ் நின்றது.

அம்மனுக்கு பெரிய கும்பிடு. முன்பு மற்றவர்கள் கும்பிடுவதை வேடிக்கை பார்ப்பான்; இப்போதுதானே கும்பிடுவது அவனுக்கே பரிதாபமாக இருந்தது.

நெல்லியடிச் சந்தியில் அவன் இறங்கியபோதுஒன்பதரையை நெருங்கிக்கொண்டிருந்தது.

மற்றவர்களிடமிருந்து விடுபட்டது பெரிய விடுதலை.

ஷேர்ட் கசங்கி, தலை கலைந்து, வேர்த்து ஆளுலும் களைப்புத் தெரியவில்லை.

பத்து நிமிஷ நடையின் பின் வீடு... அதோ வீடு......

மலரும் இருவிழிகளின் வரவேற்பில் நெஞ்சு நெகிழ்ந்தது

தூங்காமல் விழித்திருக்கும் பிஞ்சுகளை வாரி முத்தமிட்ட போது விழிகள் கலங்கின.

'அப்பா! அம்மாட்டை தோடம்பழம் கேட்டதுக்கு அப்பா கொண்டு வருவார் எண்டு சொன்னவ: கொண்டு வந்தனீங்களாப்பா?'

மழலையின் இனிமையை காது உறிஞ்ச தான் கொண்டு வந்தவைகளைப் பரப்பினான். குழந்தைகளின் கும்மாளத்துக்கு மேலாக அவள் குரல் ஒலித்தது. "எனக்கு என்ன கொண்டு வந்தீங்க?"

அவன் கைவிரல்களை மடித்து பெருவிரலால் தனது மார்பைத் தொட்டுக் காட்டினான்.

அவள் சிரித்தாள்.

மறுபடி அவன் அந்தக் குதூகலங்களில் - சந்தோஷங்களில் அமிழ்ந்திப் போனான். குழந்தைகளின் குறும்புகளை அவள் சொல்லக் கேட்கும்போது தான் இழந்துவிட்ட அனுபவங்கள் முள்ளாய் நெருடியது... ஏக்கமாய் இருந்தது.

அப்பா... அப்பா என்று சுற்றிவரும் குழந்தைகளை தரையில் விடாமல் இரண்டு கைகளிலும் சுமந்து திரிந்தான்... மார்பில் படுக்க வைத்து தூங்கச் செய்தான்... கதைகள் சொன்னான்... பாட்டுப்பாடினான்... ஒருவாரம் எப்படி ஓடி விட்டது?

கொழும்பில் இருக்கும் போதெல்லாம் ஓடாமல் நகரும் நாட்களைச் சபிக்கும் அவன், இப்போதுவேகமாக ஓடும் பொழுதுகளைச் சபித்தான்.

லீவு முடிந்துவிட்டது,

நாளை போகவேண்டும்,

இரவு—குழந்தைகள் உறங்கியபின்பும் அவள் அழுதுகொண்டேயிருக்கிறாள்,

"இப்படியே நாங்கள் அங்கேயும் இங்கேயுமாக இருக்க வேண்டியது தானா—?"

"வேறென்னசெய்யச் சொல்லுகிறாய்? எங்களைப் போன்ற நடுத்தர வர்க்கத்து ஆட்கள் எதையாவது இழந்தால்தான் ஒன்றை அடைய முடியும்— எத்தனை சந்தோஷங்களை - நிம்மதிகளை இழந்துவிட்டு வயிற்றுக்காக உழைக்க வேண்டியிருக்குது, இதில் எனக்கு மட்டும் சந்தோஷமா? அழாதே கமலா, பிறகு உன்ரை அழுத முகம்தான் என் ஞாபகத்தில் இருந்து வேதனைப்படுத்திக் கொண்டிருக்கும்— அவளின் குரலிலுள்ள சோகத்தைப் புரிந்து கொண்டு அவள் தன் கண்ணீரை அடக்க படாத பாடுபட்டாள்.

அவன் கொடிகாமத்தில் வண்டியேற நின்றான். திரும்பவும் மனம் பாறையாய்க் கனக்கிறது. அவளும்குழந்தைகளும் வழியனுப்ப வந்திருந்தார்கள்; வண்டி கொஞ்சம் தாமதமாக வரவேண்டுமே

மனம் பிரார்த்திக்கிறது.

அந்தச் சில நிமிஷங்களையும் அவன் தனது பொன்னான பொழுதுகளாக, அந்த விநாடி நினைக்கிறான்.

"கமலா! மூன்றே மூன்று மாதத்தால வருவன்"

திரும்பத்திரும்பச் சொல்கிறான்.

வண்டி வந்து நின்றதும் அவன் ஏறுகிறான்.

கலங்கும் விழிகளுடன் அவள் சிரிக்க முயன்றது வேதனையாய் இருக்கிறது.

குழந்தைகள் கையை அசைக்கிறார்கள்.

வண்டி நகர்கிறது... வேகம் பிடித்து ஓடுகிறது...

அவன், அவர்கள் நின்ற திசையையேவெகுநேரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

இப்படி நடைப்பிணமாய்ப் போவது நானூறு ரூபாய் பணத்துக்காகத்தானே-?

இழந்துவிட்ட இதே குதூகலங்களை- மகிழ்ச்சிகளைத் தான் மறுபடியும் அடையும் நாட்களைக் கணக்குப் போட்டுப் பார்க்கிறான். அவன் மட்டுமா? அவளும் கூடத்தான் கணக்குப் போட்டுப் பார்ப்பாள்.

இன்னும் மூன்று மாதங்கள்

தொண்ணூறு நாட்கள்...

இரண்டாயிரத்து நூற்றி அறுபது மணித்தியாலங்கள்...

ஒருலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து அறுநூறு நிமிடங்கள்...


[யாவும் கற்பனை]

# ஜயந்தி

அ. செ. மு.

சில காலத்துக்குமுன் தாமரைக்கேணி ரயில் நிலையத்தில் நிலையப் பொறுப்பதிகாரியாக ஒரு யாழ்ப்பாணம் மாத்தயா கடமையாற்றினார்; குடும்பஸ்தர் அவரது பிள்ளைகள் தினமும் ரயில் பயணம் செய்து கொழும்புப் பள்ளிக்கூடங்களில் படிக்கப்போவார்கள். அந்நாளில் மெனிக்காவும் விடியற்சாமமாக எழுந்து ஊர்தாண்டி ரயில் பிடித்து பஸ் பிடித்து கொழும்புக் கல்லூரி ஒன்றில் படித்து வந்தாள். அந்த நாளாந்தப் போக்குவரத்தின்போது ஸ்டேஷன் மாஸ்டரின் பிள்ளைகளுக்கும் மெனிக்காவுக்கும் மத்தியில் துளிர்த்த நட்பு' வயது வளர்ந்தது போல வளர்ந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் சேவைக்காலத்தை முடித்துக்கொண்டு ஓய்வு பெற்று ஊர் திரும்பியபோது பிள்ளைகள் மெனிக்காவை விட்டுப் பிரியமாட்டாமல் மனத்துயரப்பட்ட நிலையில் மெனிக்காவையும் சில காலம் தம்கூட அழைத்துப்போய் வைத்திருக்க அவள் பெற்றோரிடம் அனுமதி பெற்று கூட்டிச் சென்றார், நீண்ட காலமாகத் தினமும் கடிகாரம் ஓடினாற்போல் வேலைபார்த்த யாழ்ப்பாணம் மாத்தயாவேலையிலிருந்து ஒய்வெடுத்துக் கொண்டு ஊர்திரும்பியும் நீண்ட காலம் சுகசந்தோஷமாக நாள் முழுதாம் வீட்டோடு சோம்பியிருக்காமல் புதிதாக கம்பனிவேலை ஒன்றில் தொட்டுக்கொண்டு திரும்பவும் கொழும்பு வந்துசேர்ந்தார். குடும்பம் ஊரில், பிள்ளைகளுக்கு பள்ளிப்படிப்பு. மெனிக்கா, அம்மாவுக்கும் பிள்ளைகளுக்கும் துணையாக அவர்கள் குடும்பத்தில் இன்னொரு பிள்ளையாக வீட்டிலிருந்தாள். இந்தவிதமாய் சில ஆண்டுகள் இனிதாக ஓடின. ஒரு தினம் மெனிக்காவின் வாழ்க்கையில் திடீரென புயல் கொந்தளித்து அதனால் மாத்தயாவின் பிள்ளைகளுடனே மனவிரோதப்பட்டுக்கொண்டு யாரிடமும் சொல்லிக்கொள்ளாமலே ஒருபகல் அங்கிருந்து கிளம்பிவிட்டாள். பருவமடைந்த பெண், கண்ணில் படக்கூடிய தோற்றம், வந்ததான் முதலாக தனித்து எங்கும் வெளியேபோய் அறியாள். எங்கெல்லாம்போய் அலைவாளோ என்று மெனிக்கா வீடுவிட்டு வெளியேறி இரண்டு தினங்கள் பொறுத்திருந்து பார்த்துவிட்டு அதன்பின் அம்மாவும் பிள்ளைகளும் மனம் துடித்து கொழும்புக்குத் தபால் எழுதி அறிவித்துவிட்டு இருந்தார்கள். ஆனால் மெனிக்காவையோ யாருமே அதன்பின் காணவில்லை. அன்று போன மெனிக்காவுக்குப் பாதிவழியில்புதுவாழ்வு ஒன்று விடிந்தது. அதில் அவள் சங்கமமாகி சில ஆண்டுகளில் புது அவதாரமெடுத்து புதுப் பூங்கோதையாக எங்கும் உலாவிக் கொண்டிருந்தாள். மெனிக்கா, மோகனவாணி, தாமரைக்கேணி கிராமமும் அவள் பெற்றோரும் மெனிக்காவிடத்தே அதி அன்புபூண்ட ஸ்டேஷன் மாஸ்டரின் பிள்ளைகளும்-எல்லாருமே அவளை மறந்துபோயிருந்த ஒருகாலகட்டத்தில் எங்கிருந்தோ ஆடல் எழில் சூடிய தோகை மயிலாக கோவில் விழாக்களிலும் கேளிக்கை அரங்குகளிலும் தோன்றி தன் கலைவண்ணத்தினால் ஊரவர், நாட்டவர் எல்லோர் நெஞ்சத்திலும் நினைவிலும் இனிதாக இடம் பெற்றாள், என்ன நான் சொல்வது விளக்கமாகிறதுதானே, மெனிக்கா ஒரு நாட்டிய தாரகையானாள் பிள்ளைகளே! அவள் புகழ் யாழ்ப்பாண நாடெங்கிலும் பரவியது மோகனாவின் பிடிநடையில் பாத சிலம்புகளின் கிண்கிணி ஓசை எழுந்தபோதெல்லாம் தூங்கி வழிந்த கூட்டம் தோள் நிமிரும். அப்படி அவள் நடனலாவண்யம் அனைவரையும் கவர்ந்திருந்தது. இது மெனிக்காவின் வாழ்க்கையில் எப்படி சம்பவித்தது என்று தெரிந்துகொள்ள இப்போ எல்லாரும் ஆவலாயிருக்கிறீர்கள் அல்லவா, அதனையும் சொல்கிறேன்.

(தொடரும்)



## தாய்மை

சந்தி சுத்த
சென்ற மகன்
வந்து உண்டு
பின் னுறங்கும் வரை
குந்தியிருந்து,
தூங்கி வழியும்
பந்த மந்தப
பெண் தெய்வம்

-புலோலியூர்
-ஆ.இரத்தினவேலோன்

## தமிழ் நாட்டில்

# இலங்கைப் பத்திரிகை கிடைக்காததால் பிரச்னைகளும் தெரிவதில்லை

“தமிழ் நாட்டில், இலங்கை தமிழ்ப்பத்திரிகைகள் கிடைப்பதில்லை அதனால் இங்கு நடப்பவற்றை அறிந்துகொள்ள முடியவில்லை பொது நூலகங்களில் மட்டுமல்ல, எங்கள் பல்கலைக்கழக நூலகத்திலும், இலங்கை தமிழ்ப் பத்திரிகைகளை நான் பார்த்ததில்லை.

யாழ்ப்பாணம் வந்திருந்த எழுத்தாளர் திரு. ச. சு. த. சோமலேயின் புத்திரரான சோமசுந்தரம் என்னிடம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சோமசுந்தரம், அவரது தந்தையரான, தமிழ்நாடு ஆஸ்தான கவிஞர் கண்ணதாசனின் மகன் ஸ்ரீநிவாசனுடன் இலங்கைக்கு வந்திருந்தார் அவரது கல்லூரி நண்பர் ஒருவரின் விருந்தினராக சங்கானையில் தங்கியிருந்தார்.

கொழும்புக்கு வந்த இவர் நுவரேலியா, கண்டி, திருகோணமலை, கதிர்காமம், அநுராதபுரம், ஆகிய இடங்களுக்கு சென்றுவிட்டு, யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

தமிழில் அழகாக பேசக்கூடிய இவர் ஒரு துடிதுடிப்புள்ள மாணவர் சென்னை அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் 2ம வருடத்தில் விவசாயத்துறையில் பட்டப்படிப்பு படித்துவருகிறார்.

## பேட்டி:
## கா. யோகநாதன்

விவசாயத்திற்கு தமிழ் நாட்டில் நல்ல எதிர்காலம் உண்டென்றும் அதனால்தான் விவசாயத்தை தேர்ந்தெடுத்து கற்றுவருவதாகவும் கூறினார்.

யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த திரு சோமசுந்தரம், மகாஜனக்கல்லூரி, விக்டோரியா கல்லூரி யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் ஆகியவற்றில் மாணவர் மத்தியில், உரை நிகழ்த்தினார்.

கீரிமலை, நயினாதீவு, நல்லூர், மற்றும் பல இடங்களுக்கும் சென்றதாகத் தெரிவித்த அவர் இன்னும் பல இடங்களை பார்க்க வேண்டும் என்றார்.

இலங்கை வாழும் தமிழர் பிரச்னை பற்றி தமிழ்நாட்டவர்கள் எதுவும் அறிந்துகொள்ள முடியவில்லை என்றார்.

ஏன்? என்று கேட்டேன்

இலங்கைப் பத்திரிகை எதுவுமே அங்கு கிடைப்பதில்லை என்று கூறியவர் தமிழ்நாட்டு பத்திரிகை இங்கு வருகிறதா என்ற கேள்வியைபோட்டார்.

“நிறைய வருகிறது” என்றேன்.

ஈழத்தமிழர் பிரச்னைபற்றி எப்படி அறிந்துகொண்டீர்கள்? என்று கேட்டேன்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் அங்கு வந்த பின்னர் தான் அறிந்து கொண்டோம் என்றார்.

திரு. அமிர்தலிங்கம் வந்த பின், தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் மூலமும் அவரின் உரைகளைக் கேட்டு நேரிலும், தமிழர் பிரச்னைபற்றி அறிந்து கொண்டோம் என்றார்.

திரு. அமிர்தலிங்கம கலந்து கொண்ட கூட்டங்களுக்கு, பெருந் திரளான மக்கள் வந்ததாகவும், அவர்கள் இங்குள்ள தமிழர் நிலைபற்றி அறிய ஆவல் கொண்டுள்ளனர் என்றும அவர் சொன்னார்.

‘இங்கு வந்தபின் நீங்கள் அறிந்தவைபற்றி விசாரித்து ஏதாவது அறிந்துகொண்டீர்களா?-என்று கேட்டேன்.

‘ஆமாம பல்கலைக்கழக அனுமதியில் சிங்கள மாணவர் குறைந்த புள்ளி எடுத்தாலும அனுமதித்துவிடுகிறார்கள் என்றும, தமிழ் மாணவர், கூடிய புள்ளி எடுத்தும, இடம கிடைப்பதில்லை என்றும அறிந்துகொண்டேன்’- என்றார்

‘எங்கே அறிந்துகொண்டீர்? யாழ்ப்பாணத்திலா? கொழும்பிலா? என்று கேட்டேன் ‘யாழ்ப்பாணத்தில்’ என்றார்

கொழும்பிலும், மற்றும தென்பகுதியிலும், பல தமிழர்களைச் சந்தித்ததாகவும, அவர்கள் தமிழர் பிரச்னை பற்றி, பெரிதாக எதுவும கூறவில்லை’ என்றும சொன்னார்

கொழும்பில், சிங்கள மாணவர்களையும சந்தித்ததாகவும, கூறிய அவர், தென்பகுதியில் பாகுபாடு இருப்பதாக அறிய முடியவில்லை என்றும சொன்னார்.

யாழ்ப்பாணத்திற்கு வந்து பல இடங்களுக்கும சென்ற போது, தமிழர்கள் பட்டுவரும கஷ்டங்களை அறிந்து கொண்டதாகவும, அவர் தெரிவித்தார்.

அடையாறில் ‘சோமு நூலகம்’ என்ற ஸ்தாபனத்தை 3 மாதகாலத்தின் முன் ஆரம பித்துள்ளதாகவும, அச்சுக்கூடமொன்றை நிறுவமுடிவு செய்திருப்பதாகவும தெரிவித்தார்.



## சோமலேயின் மகன் சொல்கிறார் இப்படி!

‘சோமு நூலகம் எங்கே இருக்கிறது’ என்று கேட்டேன் சாஸ்திரிநகர், அஞ்சல் கட்டடம், சென்னை-20 இருப்பதாகக் கூறினார்.

ஏதாவது நூல்கள் வெளியிட்டிருக்கிறீர்களா? என்று கேட்டேன்

‘சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும் ‘கோயிலூர் மலர், காஞ்சிபுரம் மலர், அலைகடலுக்கு அப்பாலும் நகரங்களில் ஆலயப்பணி’ ஆகிய நூல்களை வெளியிட்டிருக்கின்றோம்’ என்றார்.

திரு. அமிர்தலிங்கம் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கும் வந்ததாகவும், அவர் வந்த பின்தான் ஈழத்தமிழர் நிலை பற்றி அறிந்து கொண்டதாகவும் கூறினார்

கொழும்பிலுள்ளபத்திரிகைக் காரியாலயங்களுக்குச் சென்றதாகவும், அங்குள்ள தமிழர்கள், தமிழர் நிலை பற்றி மோசமாக எதுவும் சொல்லவில்லையென்றும் கூறினார்.

உங்கள் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி எது? என்று கேட்டேன்.

மகாராஷ்டிர மாநிலத்தில் வார்தாவில், அகில இந்தியப் பல்கலைக்கழகங்கள் காந்தி பற்றிநடத்திய மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிற்கு அண்ணாமலை பல்கலைக்கழகத்திலிருந்து ஒரே ஒரு பிரதிநிதியாக நான்மட்டும்தான் சென்றிருந்தேன். இதுமறக்கமுடியாதது-இப்படிக்கூறினார்.

இம்மாநாட்டில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக ஆச்சாரியா வினோபாபாவே கலந்துகொண்டதாகவும் கூறினார்.

நாட்டு நலன்களில் மாணவர் பங்குபற்றி, அங்கு கருத்தரங்கு நடந்ததாகவும், அதில் தான் கலந்துகொண்டதாகவும் கூறினார்.

தமிழ்நாடு முன்னேறியிருக்கிறது.

நகரம் மட்டுமல்ல கிராமங்களும், பெருமளவில் முன்னேறியிருப்பதாகக் கூறினார்.

‘குங்குமம், இதயம் பேசுகிறது போன்ற புதிய சஞ்சிகைகளுக்கு வரவேற்பு இருக்கிறதா?’ என்று கேட்டேன்.

ஆரம்பத்தில் வரவேற்பு இருந்ததாகவும், பின்னர் குறைந்துவிட்டதாகவும் கூறினார்.

கல்கி, குமுதம், ஆனந்த விகடன் போன்ற பழைய சஞ்சிகைகளுக்கே தொடர்ந்து செல்வாக்கு இருப்பதாகவும் கூறினார்.

தமிழ்நாட்டில் இன்று இனிமா எப்படி இருக்கிறது? என்றேன்.

இப்போ ரஜனிகாந்த் மார்க்கட் என்றார்.

மாணவர்கள் மாணவிகள் ரஜனிகாந்த் விசிறிகளாகவே இருபதாகவும் கூறினார்.

ரஜனிகாந்திற்கு சுகயீனம் ஏற்பட்டு, சிகிச்சைக்குப் பின், படங்களில் நடித்து வருவதாகவும் கூறினார்.

இங்கு ரஜனிகாந்த் படம் வருவதில்லையா? என்று அவர் கேட்டார்.

ரஜனிகாந்த் படமல்ல, எந்த தமிழ்நாட்டுப்படமும் 6 மாத காலம் வரவில்லையென்று கூறியதும் ஆச்சரியப்பட்டார்.

ரஜனியின் படம் ‘மூன்று முடிச்சு’ மட்டுமே வந்ததாகவும் கூறியபோது அதிலும் பார்க்க வேறு படங்களில் நல்லாய் நடித்திருப்பதாகச் சொன்னார்.

அரசியல்பற்றி பேச்சை எடுத்ததும் ‘பிளீஸ்!’ அரசியல் வேண்டாம்’ என்று சிரித்தபடி முற்றுப்புள்ளிவைத்துவிட்டார் சோமசுந்தரம்.

---

# நெடுந்தீவில் இடம்பெற்ற திருக்குறள் விழா

திரைகடல் ஓடி திரவியம் தேடிய தமிழினத்தின் வழிவந்த பரம்பரையினரின் போதகரான திருவள்ளுவரின் திருக்குறளுக்கு அலைகடல் கடந்து அறிஞர்கள் கூடி மாநாடுநடத்தினர் இலங்கையின் வடபாலமைந்த சப்ததீவுகளில் ஒன்றான நெடுந்தீவிலே இந்த ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கு தமிழ்மறைக்கழகத்தினர் ஒழுங்குகள் செய்திருந்தனர்,

தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம அவர்கள் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக ஈழத்தின் பல்வேறுபகுதிகளில் நடத்திய இந்த மாநாட்டை இம்முறை நெடுந்தீவில் நடாத்த துணிந்தமை பாராட்டுக்குரியதே விழாக்கோலத்தால் புதுப் பொலிவு பெற்றிருந்த நெடுந்தீவிலே, மகாவித்தியாலய மண்டபத்திலே இரண்டு நாட்கள் வெகு விமரிசையாக இந்த மாநாடு நடைபெற்றது.

தொடக்கநாளில் திருவள்ளுவர் ஏட்டுச்சுவடியை ஊர்வலமாக எடுத்துச்சென்றனர். நெடுந்தீவுக்கே சிறப்புத்தரும் குதிரைகள் முன்னேசெல்ல ஏட்டுச்சுவடியை ஏந்திய வாகனத்தை உதவி அரசாங்க அதிபர் ஆ. செந்தில்வேல்செலுத்திச்செல்ல நகர்ந்த ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாகும் மாநாட்டின் முகப்பு வாயிலில் புதிதாக வார்க்கப்பட்ட வள்ளுவர் சிலையை அருட்திரு தனிநாயகம் அடிகளார் திரைநீக்கம் செய்துவைத்தார் திரு. ஜெ செல்லத்தம்பி குடும்பத்தினரின் அன்பளிப்பான அந்தச்சிலை மாநாட்டின் சிறப்புக்கு அணிசேர்த்தது

மாநாட்டுச் செயலவையின் தலைவரான இரா சினத்தம்பி நெடுந்தீவின் பெருமைகளையும், மக்களின் வாழ்க்கை வரலாற்றையும் தனது வரவேற்புரையில் எடுத்தியம்பினார். விழாவைத் தொடக்கிவைத்த கலாநிதி சிவஞானசுந்தரம் திருவள்ளுவரின் பெருமைகளையும், திருக்குறளின் மகிமைகளையும் மனங்கொள்ளத்தக்க வகையில் கூறினார்.

மாநாட்டின் சிறப்பம்சமாக தயாரிக்கப்பட்டிருந்த விழா மலரினை விழாத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தி வெளியிட்டுவைத்தார் மேல்நாட்டு அறிஞர்கள் திருக்குறளில் கொண்டுள்ள பற்றையும் உலக இலக்கியங்களில் அதற்குரிய இடத்தையும் பண்டிதர் விரித்துக் கூறி விளங்கவைத்தார். முதற் பிரதியை யாழ்ப்பாணம் நாதன்ஸ் உரிமையாளர் திரு. த. மாணிக்கவாசகரும், சிறப்புப் பிரதியை திரு யோ. எ...காரும் பெற்றுக்கொண்டனர். மலர்வெளியீட்டுரையை அதன் ஆசிரியர் திரு வை. இராஜேஸ்வரன் நிகழ்த்தினார்.



## வை. இராஜேஸ்வரன்

“சீரிழமைத் திறன்குன்றித் தீந்தமிழின் வெளிப்பாடாம் வள்ளுவனார் வாய்மொழியை தெள்ளுத்தமிழ் அள்ளுநடையில் திசையனைத்தின் பெருமையெலாம் தமிழ்த்திசையே வென்றேற படைக்கப்பட்ட கட்டுரைகளை மலராக்கி மக்கள் முன் காணிக்கையாக்குகிறேன்” என்று அவர் தனதுரையில் கூறினார். மலர் விமர்சன உரையை புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆற்றினார் “திருவள்ளுவரின் முப்பால் குப்பனை உறவோங்கும் மக்களை வாழ்வியலுக்கு என்றும் தேவையானது. திருவள்ளுவரின் உள்நோக்கங்களை திருக்குறளைக்கொண்டே அனுமானிக்கவேண்டும். குறளுக்கு வந்துள்ள உரைகளை வைத்துக்கொண்டு வள்ளுவரைக்கணித்தல் தவறாகும். திருவள்ளுவர் சிந்தனையால் முற்போக்காளர். போதந்தரும் பொருள்விரிப்பால் இடதுசாரி. நோய் நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும் வாய்நாடி, வாய்ப்பச்செய்த வைத்தீஸ்வரனே திருவள்ளுவர் எல்லோருடைய வாழ்க்கை நிலைகளையும் சூழல்களையும் எண்ணத்தில் கொண்டு கருத்துக்களைக் கூறியுள்ளார் வள்ளுவர்” என்றார் அவர்.

விமர்சன உரைக்கு பின்னுரை வழங்கிய தலைவர் பண்டிதர், புலவரின் பேச்சை இலாகித்து அரைமணித்தியாலம் உரைநிகழ்த்தியமை மாநாட்டில் குறிப்பிடத்தக்க நிகழ்வாய் அமைந்தது. மாநாட்டில் முதல் நாள் நிகழ்ச்சியில் சிறப்புரை நிகழ்த்தியவர்கள் குறட்பாவின் பல்வேறு பண்புகளையும் சிறப்புற எடுத்துக் காட்டினர் “வள்ளுவர் கண்ட பெண்மை” என்னும் தலைப்பில் நடந்த கவியரங்கிற்குவந்த கவிஞர்கள் அழகு தமிழால் தங்கள் ஆற்றலைக் காட்டி பாராட்டினைப்பெற்றனர். கவிஞர் அமுது தலைமை வகித்தார்.

சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி ஆறு அழகப்பன் அவர்கள் துணிச்சல் மிகுந்த பேராசிரியர். நெடுந்தீவுக்கடலலைக்கு தீவகத்தினரே திடுக்கிடும்பொழுது திரு அழகப்பன் தீரமுடன் துணிந்துசென்றமை பாராட்டிற்குரியது.

‘தமிழுக்கு சேக்கிழாரும் திருவள்ளுவருமே கதி. வள்ளுவர் காலத்தில் மது, மாது மாமிசம் ஆகியவை மனித குலத்தைச் சீரழித்தன. சீரழிந்த சமூகத்தை செம்மைப்படுத்த வேண்டிய கடமை வள்ளுவருக்கிருந்தது தீமைகளைச்சாடி நன்மைகளைத்தேடி வள்ளுவர் வாய்மொழிகள் தொழிற்பட்டன மாதினை விரும்பி மாதவியிடம் சென்ற கோவலனின் பரிதாப நிலையை நாம் அறிவோம், கண்ணகியின் கற்பு பெண்ணினத்தின் பெருமையை எடுத்துக்காட்டுவதை நம்மால் உணரமுடிகிறது

‘பெண்ணிற் பெருந்தக்க யாவுள’ என்ற ஒரு குறளை மனதில்வைத்துக்கொண்டே இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை செய்திருக்கவேண்டும் வையத்துள் வாழ்வாங்கு வாழும்மனிதர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் உண்மையை வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகின்றார். திருக்குறள் முத்தமிழையும் ஒருங்கே கொண்டுள்ளது அதனை அரசியல் நூலாக, தேசிய நூலாக, ஆன்மீக நூலாக, ஞான நூலாக, அறிஞர்கள் போற்றுவதைக் காண்கிறோம்’ என்றார் ஆறு அழகப்பன்.

ஆறு அழகப்பனின் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களின் சார்பில் புலவர் ஏ. டபிள்யு அரியநாயகம் பாராட்டுரை வழங்க சங்கீத பூஷணம் வி. சுந்தரலிங்கம் அன்னாருக்கு பொன்னாடை போர்த்தினார். நெடுந்தீவு மக்களும் அறிவுப் பொழில் மன்றத்தினரும்

(8-ம் பக்கம் பார்க்க)

# அரங்கும் அவையும்

## ஹாஸ்ய நாடகம் கடினமானது

"ஹாஸ்ய நாடகம் சோக நாடகத்திலும் கடினம். பாமரர், கைதட்டிச் சிரிப்பது ஹாஸ்யமன்று; உண்மையான நகைச்சுவை, மனித இயல்பின் விளக்கமாகும். அஃது இயற்கை உண்மையைக் கொண்டு விளங்கும். அத்தகைய நகைச்சுவை நாடகங்களில் வெற்றி பெற்றுன் மோலியர். தன் வாழ்விலின்றும், உலகஅனுபவத்திலிருந்தும் அவன் நகைச்சுவைக் காட்சிகளைப் படைத்தான். மனிதனின் உள்ளும் புறமும் அறிந்து அவன தந்த பாத்திரங்களைச் சிருஷ்டித்திருக்கிறான். ஷேக்ஸ்பியர், பால்ஜாக் முதலியோர்போலவே அவன் தனது நாடக பாத்திரங்களின் அந்தக்கரணத்தை நன்கறிந்தான். ஆண்-பெண் இயல்பை அவன் படம்பிடித்தான். முகஸ்துதி, மோசம், வஞ்சம், களவு, கருமித்தனம், செல்வச்செருக்கு முதலிய குணங்களை அவன் உருவாக்கி மேடைமேல் ஆடச்செய்தான். மனிதவியல்பின் கோலத்தையும், அலங்கோலத்தையும் நயம்பட அரங்கில் நடித்துக்காட்டிய மோலியரை வியந்து புலவர்மணி F C கூறிய வாசகங்கள் இவை. நகைச்சுவை நாடகங்கள் வேண்டும். லென்ன? இசை நாடகத்தில் இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலையும், நாட்டுக் கூத்தில் கட்டுவன்புலம் அ. த.க. பாடசாலையும், நாட்டிய நாடகத்தில் மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரியும், கனிஷ்டபிரிவில் வட இந்து மகளிர் கல்லூரியும் முதலாவது இடத்தைப் பெற்றன. வடஇந்துமகளிர் கல்லூரியின் 'ஏகலைவன்' நாடகத்தில்பாத்திரத்தோற்றங்கள், அசைவுகள், உச்சரிப்புகள், நடிகர்களே பொருத்தமாகப்பாடிநடித்த தன்மைகள் முறையான ஒத்திகையின்பின் மேடையிடப்பட்ட நாடகமென வலியுறுத்தின.

## குணசித்திர நடிப்புப் போட்டி

மாந்தரின் பல்வேறு குண இயல்புகளில்ஒன்றைத் தேர்ந்து, அக் குணத்தை அழுத்தும் முறையிலே ஒரு தனிநபர் முப்பது நிமிடங்கள் அவையோரை ஈர்க்கும் வகையில் நடிப்பது இலகுவான விடயமன்று. "நம்பிக்கையின் பிம்பமாக, வயது வந்த பெண்ணை நடித்த காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி மாணவி ச. சுசிலா குணசித்திர நடிப்பில் முதலாவது இடத்தைப் பெற்றுர். நினைவாடைகள், வாத்தியங்களுடன் கூடிய அசைவுகள் மூலமும், 'ஊமை' பாணியிலும்காட்டப்பட்டமையும், அதிர்ச்சியுறும் நிலை 'உறையும்நிலை' உத்தியில் காட்டப்பட்டமையும் இவரது நடிப்பை ஒரு படி உயர்த்தின.

## கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை

வெறும் கோமாளித்தனங்களல்ல. தொடர்பற்ற துணுக்குக் கோர்வைகளுமல்ல. சிந்திக்க வைக்கும் சிரிப்பினையூட்ட, மோலியர் நாடகங்களைப் படிப்பதுபயன்தரும்.

## கலைப்போட்டிகளில் கல்லூரி விருந்து

கடந்த 16ம் 17ம் 18ம் திகதிகளில் சங்கீத நடனநாடகப் போட்டிகளையாழ். மாவட்டரீதியில் கல்விஇலாகா, யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடாத்தியது. மேடையிடப்பட்டநாடகங்களில்உயர்தரத்தால் விஞ்சி அவையினருக்கு பெருவிருந்தாய் அமைந்தன சிரேஷ்ட பிரிவு சாதாரண நாடகத்தில், 'மக்பெத்' என்ற நாடகத்தை நடித்த இளவாலை புனித கென்றியார் கல்லூரி முதலிடத்தைப் பெற்றது. பகலில் நடிக்கப்பட்டாலும் இரவில் நடிக்கப்படும்போது ஏற்படும் கனதியை நாடகத்தில் காணமுடிந்தது. நல்ல தமிழிலே அட்சரசுத்தியுடன்குரலினை அவையோரைநோக்கி எறிந்து நடித்தார்கள் மாணவர்கள். இருபது மாணவர்கள் வரை பங்குகொண்ட இந்நாடகத்தில் இடம்பெற்ற ஒழுங்கும் நடிப்பு முறையும் பூரண பயிற்சியும் சுவைஞர்களை பெரிதும் ஈர்த்தன. ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் மேடையிட்டு நாடக உலகில் நற்பெயர்பெற்றியங்கும் பலாலி ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் திரு. க. சோமசுந்தரம் போன்றோர் அநுபவ நடிகர்களுடன் இத்தகைய மாணவர்களையும் சேர்த்து ஆண்டுதோறும் நாடக மேதை ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மேடையிட்டா

## இலக்கியக் கருத்தரங்கில் 'சமகால இலக்கியம்'

"இலக்கியம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள் சங்க காலம். சங்கம் மருவியகாலம் என்றரீதியில்காலப் பகுபாடு செய்வது பொருத்தமற்றது மட்டுமன்றி, அவசியமற்றதெனவும் கூறத்தோன்றுகிறது. 'சமகால இலக்கியமென்னும்போது நாம்வாழுகின்ற காலகட்டத்தில் நாம் சுவைக்க, கிடைக்கக்கூடிய இலக்கிய ஆக்கங்களைக்குறிப்பிடலாம். சமகால இலக்கியங்களை ஆசிரியர்கள் முக்கியத்துவம் கொடுத்து மாணவர்க்கு புகட்டவேண்டும்" எனக் குறிப்பிட்ட பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி தொடர்ந்து பேசியதாவது: "பழமையிலும் பல அரிய அம்சங்களைக் காண்கிறோம். சங்கஇலக்கியங்களில் சமயச் சார்பற்ற பொதுக் கருத்துக்கள் நிரம்ப உள்ளன. இதேபோல இன்று வரும் நவீன படைப்புக்கள் காலத்தோடொட்டிய மாற்றங்களைத் தொட்டு, யதார்த்தபூர்வமாக, நவீன உணர்வோட்டத்துடன், பேச்சு வழக்கில்கூட வார்க்கப்படுகின்றன. சமகால இலக்கியத்தின் பொருளாக எதையும் எழுத்தாளன் தேர்ந்தெடுக்கலாம் என்றநிலை ஏற்பட்டுள்ளது. இலக்கிய வகைகளும் பல்கிப்பெருகியுள்ளன. சமகால இலக்கியங்களைக் கற்றல் கல்வியில் இன்றியமையாததுடன் இலக்கிய நோக்கை அடையவும் அவசியமாகும்." "சமகால இலக்கியமும் சமூக அடிப்படைகளும்' என்னும் பொருள்பற்றிப் பேசிய கலாநிதி க. சிவத்தம்பி அவர்கள் மக்கள் ஊடகமாக, சமூகத்தை முழுமையாக காட்டுவதாகஜனநாயகத்தன்மை வாய்ந்ததாக பழமையை விடுத்து உலகநோக்கைவலியுறுத்தவல்லதாக அமையும் சமகால இலக்கியங்கள் வாழ்வுமலர உதவுவன' என குறிப்பிட்டார். யாழ். பல்கலைக்கழக நூலகர் திரு. ஆ. சிவனேசச்செல்வன் பேசும்போது, நவீனபடைப்புக்களை கல்லூரிகளில் உள்ள நூலகங்களில் வைப்பதுடன் மாணவர்களிடை வாசிக்கும் பழக்கத்தையும் ஆசிரியர்கள் ஊட்டவேண்டும் எனக் கூறினூர். திரு. மௌனகுரு பேசும்போது, கற்பனைகள் மிக்க நம்பத்தகாதவைகளாய் அமையும் இலக்கியங்களைவிட யதார்த்தபூர்வமான இலக்கியங்கள் மேம்பட்டவை என வற்புறுத்தினூர். இக்கருத்தரங்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் காங்கேசன்துறை வட்டாரக்கல்வியதிகாரி திரு. சிவஞானசுந்தரம் தலைமையில் நடந்தது. ஆரம்ப உரையில் வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள் சமூதாயப் பிரக்ஞையைத் தூண்டவல்ல இலக்கியங்களின் தேவையை வலியுறுத்தினூர்.

## குமரகுருபரர்—(2)

# மந்தி நடத்திய கழைக்கூத்து

### வ. குகசர்மா

திருவாரூர் ஒரு தெய்வப் பதி. அப்பதியில் அருள்புரிந்திருப்பவர் தியாகேசர் என அழைக்கப்பெறுவர். திருவாரூரைக் கமலை என்றும் கூறுவர். நீர்வளம் மிக்க மருதவளஞ்சூழ்ந்த இடம் கமலை. தியாகேசரைப் பாட வந்த குமரகுருபரர் "பூம்புனல் மருதம் தீம்புனற் கமலைத் திருநகர் புரக்கும் கருணையம் கடவுள்" எனக் கூறுவர். கடவுள் வணக்கத்திற்கு இயற்கைச் சூழ்நிலையின் சிறப்பு வேண்டப்படுவதொன்று. இதைமனதிலேவைத்து கமலைப் பதியின் வயலைச் சூழ்ந்த சோலையில் காணப்படும் ஒரு காட்சியை குமரகுருபரர் காட்டுகிருர்.

சோலையின் அருகே உயர்ந்த ஒரு பச்சிளம் கமுகு. அதிலே குலைகுலையாக பாக்குகள் தூங்குகின்றன அந்தக் கமுகிலே முல்லைக்கொடி படர்ந்து உச்சி மட்டும் போய் கமுகமர ஓலைகளைப் படருகிறது. மேலும் வளர்ந்து கீழே படிந்து அந்தக் கமுக மரத்தைச் சுற்றி நிற்கும் குலை ஈன்ற இளம் வாழை மரத்தில் படருகின்றது. இங்கே கழைக் கூத்திற்கு ஒரு மேடையை உண்டாக்கி விடுகிருர் ஆசிரியர்.

கமுகமரம் நீண்ட கம்பமாகக் காட்சியளிக்கிறது. அதனைச் சுற்றி நிற்கும் வாழை மரங்கள் சூழ அடிக்கப்பட்ட முளைகளாகின்றன. அவற்றினிடையே படரும் முல்லைக் கொடிகள் கயிற்று வடங்களாகவும்காட்சியளிக்கின்றன இப்போ காட்சி ஆரம்பமாகிறது.

ஒரு மயில் அந்தக்கமுக மரத்தின் மேல் வந்து தங்கி தோகையை விரித்து களிநடனம் செய்கிறது. இது ஒரு பெண் கம்பத்தில் நின்று நடிப்பதைப் போலத் தோன்றுகிறது. மயில் நடிப்பதை ஒரு பெண் நடிப்பதாகக் கூறுவது இலக்கிய மரபு. பக்கத்திலே உள்ள பலாமரங்களிலுள்ள முட்புறம் கொண்ட பலாக்கனிகளை மத்தளமடிப்பதுபோலத்தாக்குகின்றன சில குரங்குகள். மற்றோர் குரங்கு தன் தலையிற் சுமந்துகொண்டு வரும் பலாக்கனியை மற்றைய வானரங்கள் பறித்துவிடுமோ என்று அச்சம் கொள்கிறது. அதனுல் முல்லைக்கொடிவழியே மெல்லமெல்ல நடந்துசெல்கின்றது. முதலில் தான்கண்ட இக்காட்சியைசெய்யுளடிகளில் கூறிவிடுகிருர்.

"பைங்குலைக் கமுகிற்
படர்கிளை விரித்தொரு
கண்செய் கூற்றல்
களிமயில் நடிப்ப
நெடுந்தாள் மந்திகள்
குடங்கையிற் றாக்கி
முட்புறக் கனிகள்
தாக்கக் கொட்புறும்
வானரமொன்று
வருக்கைத் தீங்கனி
தாமெடுத் தேந்துபு
தலைமேற் கொண்டு
மந்திகள் தொடர
மருண்டுமற் றதப்
பைந்துணர்க் கொடியிற்
படர்தரு தோற்றம்".

பின்புலவர் இந்தக் காட்சியை தனக்குரிய வித்துவத் தன்மையால் மற்றொரு காட்சியாக மாற்றிக் காட்டுகிருர். கவிதை என்னும் மாயக்கண்ணாடி மூலம் கவிஞன் காட்டும் இக்காட்சியைக்கண்டு வியப்படைகிறோம். அக்காட்சிதான் என்ன?

கமுகின்மேல் நடிக்கும் மயில் நடனம் செய்யும் அழகிய மங்கையாக மாறிவிடுகிருள். அது போல பலாப்பழத்தைத் தாக்கும் குரங்குகள் மத்தளம்அடிப்போராகவும், கொடி மேல் நடக்கும் குரங்கு கயிறுமேல் நடக்கும் கழைக்கூத்தாடியாகவும், அதன் தலையிலுள்ள பலாப்பழம் குடமாகவும்மாறிவிடுகிறது. இதோ அந்தக் காட்சி,

"வடஞ்சூழ்ந்து கிடந்த
நெடுப்பெருங் கம்பத்து
அணங்கனுள் ஒருத்தி
ஆடினள் நிற்ப
பெரும்பணை தாக்கி
மருங்கினர் கொட்ட
குடந்தலை கொண்டொரு
கன்கழைக் கூத்தன்
வடந்தனில் நடக்கும்
வண்ணமது ஏய்க்கும்"

## நிரந்தரத் தீர்வு

தங்கள் 1979-6-10ந் திகதிய 'ஈழநாடு வார மலரில் "நிரந்தரத் தீர்வுக்குச் சில யோசனைகள்" என்னும் தலைப்பில், பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் தொடர்பாக நான் எழுதிய கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பிரச்னையின் நிரந்தர தீர்வுக்கு நான் கூறிய யோசனை 'எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட தமிழீழ மண்ணை மீட்டு சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழ சமதருமக் குடியரசை நிறுவுதல்' என்பதாகும். அப்பகுதியை நீங்கள் பிரசுரித்த கட்டுரையிற் காணேம். அப்பகுதி நீக்கப்பட்டபின் கட்டுரையில் எப்பகுதியைத் தேடிப் பார்த்தாலும் நிரந்தரத் தீர்வுக்கான யோசனையை அங்கே காணமுடியவில்லை.

ஆ. நடராசா
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி




நூல்: கர்நாடக இசை விளக்கம்(முதலாம் பாகம்)
ஆசிரியர்: சங்கித பூஷணம் செல்லப்பா சிவபாத சுந்தரம்
வெளியிட்டோர்: தர்மவதி வெளியீடு, மார்ட்டின் வீதி.

இன்றைய உலகில் தமிழ் மக்கள் தம் கலையின் வளர்ச்சியையும், மறுமலர்ச்சியையும் விரும்பி அதற்கென பலபுதிய வழிகளை ஆக்குவதிலும் ஆக்கியதைத் தேடிக்கற்று அறிந்து கொள்வதிலும் பேரூக்கம் உடையவராய்க் காணப்படுகின்றனர். இதனுல் சங்கீதம் நடனம், சித்திரம், சிற்பம் ஆகிய துறைகளில்,புதிய புதிய உத்திகளைக்கையாண்டு பலரும் பல நூல்களை வெளியிட முன்வந்துள்ளனர். எனினும் கர்நாடக இசையைப் பொறுத்தமட்டில் புதிய முயற்சிகளும் வழிகளும் போதியளவு மேற்கொள்ளப்படாத நிலையை எண்ணி பலரும் மனங்குன்றி இருந்தனர்.

இக்காலகட்டத்தில்தான் சங்கீத பூஷணம் திரு. செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்கள் இசைநுணுக்கங்களை மாணவர்கள் இலகுவாகப்புரிந்து பயன் அடையும் வண்ணம் நல்லதோர் வழிகாட்டியாய் கர்நாடக இசைவிளக்கம் என்னும் நூலினை வெளியிட்டுள்ளார்: இவரது சேவையை இசை உலகம் அறிந்து பெரும் பயன் பெறவேண்டுமென் பதனுலேயே இந்நூலுக்கு விமர்சனம் எழுத முன்வந்தேன்.

இந்நூலின் முதலாம் பாகத்தில் சுரவரிசைகள் தொடக்கம் அலங்காரம் வரையுமுள்ள பாடங்களுக்கு எண்களும் அடிப்புக்குறிகளும் இட்டு மாணவர் உள்ளத்தில் இலகுவாகப் பதியும் வண்ணம் புதியதொரு வழியைக்காட்டியுள்ளார். அன்றியும் அட்சரம் மாத்திரை இவைகளுக்கிடையிலானவேறுபாடுகளையும் நன்கு விளக்கியுள்ளார்.

இத்துடன் வடஇலங்கை சங்கீத சபையினரின் பாடத்திட்டத்திற்கமைய முதலாம்இரண்டாம் பகுதிகளுக்கேற்ப கீதம் ஜதிஸ்வரம், ஸ்வரஜதி, வர்ணம் முதலிய பாடங்களுடன் 225 வினுக்களும் அவைகளுக்கான விடைகளும் தந்துள்ளார்.

இந்நூல் மாணவ உலகிற்கு ஒரு வழிகாட்டியாய் அமைந்துள்ளதுடன் ஆசிரிய உலகம் இதைக் கைநூலாகக் கொள்வதன்மூலம் போதனுமுறையை இலகுவாக்கிக் கொள்ளலாம் என்பது எனது முடிவு.

—சங்கீத பூஷணம்
வி.கே. குமாரசாமி

# உடலுக்கு உறுதிதரும் வாழைப்பழம்

எமது உடலுறுதிக்குத் தேவையான சத்துக்களனைத்துமே வாழைப்பழத்திலுண்டு. பெரும்பாலும் காபோவைதரேற்று இருந்தாலும், மிகுதியாக இருக்கும் புரதம், கொழுப்பு, நும்புத்தன்மை, உலோகச்சத்துக்கள், உயிருட்டிகள் என்பன தரத்தில் சிறந்து விளங்குகின்றன. புரதச் சத்து 1.2 வீதமே இருந்தாலும் அது தரத்தில் மிகவும் கூடியது. மற்றும் வாழைப்பழத்தில் உள்ள நும்புத் தன்மையான நார் உணவுச் சமிபாட்டிற்கு மிகவும் பிரயோசனமானது. இது சிவகக்குளாயை உறுத்தாது காக்கின்றது மற்றும் உறுப்புக்களுக்கும், ஆக்கச் சிதைவுக்கும், சக்திக்கும் தேவையான சோடியம், பொட்டாசியம், கல்சியம், இரும்பு, அயோடின், மக்னீசியம், மங்கனீஸ், குளோரின், கந்தகம், செம்பு முதலிய உலோகச் சத்துக்களும், உயிருட்டி ஏ, பி, சி, ஜி என்பனவும் காணப்படுகின்றன.

குழந்தைகள் தொடக்கம் முதியவர்கள் வரைக்கும் எவரும் தாராளமாகப் பாவிக்கக் கூடிய பழமாகும். ஒரு சாதாரண வாழைப்பழம் இரு சிறிய ஆப்பிள் பழங்களுக்கும், ஒரு கோப்பை தோடம்பழ ரசத்துக்கும், நான்கு பேரீந்து பழங்களுக்கும், இருபது திராட்சைப் பழங்களுக்கும் சமமானது மிகவும் தூய்மையான பழங்களிலும் ஒன்றாகும்.

நோயாளிகள் பயப்படாமல் வாழைப்பழத்தைச் சாப்பிடலாம் ஏனெனில் அது இலகுவில் சீரணிக்கக் கூடியது வயிற்றுப்போக்கு உள்ள குழந்தைகளுக்கு வாழைப்பழத்தைக் கொடுத்தால் நோயும் தீர்ந்து உடல் வலிமையுமுண்டாகும். மேலும் வளரும் பிள்ளைகளுக்கு வாழைப்பழம் மிகவும் நன்று. இருமாதக் குழந்தை தொடக்கம் மூன்று வயதுப் பிள்ளைகள்வரை தினம் வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் மூளை நன்கு விருத்தியடையும். தினம் பாலோ அன்றேல் முட்டையோ குழந்தைகளுக்குக் கிடைப்பது கஷ்டம். ஆனால் தினமும் ஒரு வாழைப்பழம் கிடைப்பது எளிது.

வாழைப்பழம் மட்டுமல்லாது எமக்கு வாழை முழுவதுமே (சமூலம்) பயன்படுகிறது இதைத் தேரையர்

நற்கதலிக் கந்தம் அனல் தக்கும்
தண்டோ குடலிற்
சிக்குமயிர் தோல் நஞ்சுத் தீர்ந்திடுங்
காண் தொல்குறுபூ
மேக மொழிக்கும் பிஞ்சால்
வெகி
கடுப்பேகுங் காயால்
தேக முழுக்கக் காலாந்தேர்
என

அழகாகக் கூறியுள்ளார். மயக்கமடைந்தவருக்கு வாழைத் தண்டைச் சாறாகப் பிழிந்து கொடுக்க உடன் மயக்கம் தீரும் நெருப்புச் சுட்ட புண்ணுக்கு அச்சாறு மிகவும் நன்மை பயக்கும் மேலும் வாழைத்தண்டுச் சாறு குடல் கற்கள், குடல் வாலழற்சி வராது தடுக்கும்.

வாழைப் பூ மூலரோகம், வயிற்றுக்கடுப்பு, தேகஎரிவு, குடற்புண், வாய்ப்புண் தீரும். இரத்தத்துக்கு செந்நிறத்தையும் கொடுக்கும்

மேலும் தினம் வாழை இலையில் உணவு உண்பதால் ஆரோக்கியம் வளரும்

பித்தம் தீரும், சீரணிக்கு மிகவும் குறுகிய காலத்தில் பயன்தரும் பயிர்களில் ஒன்றாகும் வாழையின் பல்வேறு ஆகங்களிலிருந்தால் [illegible] எல்லா இனங்களும் கிடடத்தட்ட ஒரே சத்துள்ளவையாகும்.

தேசத்துக்கு தேசம் பயன்படுத்தப்படும் வாழைப்பழங்களும் வித்தியாசப்பட்டாலும் எல்லோராலும் வாழைப்பழம் ஒரு சிறந்த, ஆரோக்கியத்திற்குரிய சத்துப் பழமாகக் கணிக்கப்படுகிறது

டாக்டர்;
இந்திரா. தர்மலிங்கம்

---

## இலக்கியத்துறையில் இளைய தலைமுறை-16

# எரியும் பிரச்னைகளில் மலரும் அக்கினிப்பூக்கள்

காவலூர்
எஸ். ஜெகநாதன்

'கூலி' பொறித்த பல கைகள்தான் மறைந்துவிட்டன. அதனால் மட்டும் பல்டனறவர்களின் வேகம் குறைந்துவிடுமா? மாத்தளை பஸ் இந்தக்கேள்வியை எழுப்பிக் கொண்டு விரைந்தது. அடுத்தடுத்து வரும் திருப்பங்களாக் நெஞ்சுக்குள் தண்ணீர் இல்லாமல் போனாலும் பச்சைப் போர்வையால் தன்னை மூடிக் கிடக்கும் மலைமகளின் காட்சி கண்ணைக்கவர கருத்தைக் கவர்வது... கூடைநிறைய தேயிலைக் கொழுந்து - சுமக்கமுடியாத பாரம்- சுமக்கத்தானேவேண்டியிருக்கிறது. இயந்திரமாகிவிட்ட கைகள், இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள்- அதன் உறவை நீக்க... பசியைத் தற்காலிகமாக ஒத்திவைக்க வாயுள் மென்றுகொண்டிருக்கும் புகையில. இப்படி வாழும் அந்தக் கூட்டுக்கும் ஒரு உள்ளம் இருக்கிறது. அவளும் பெண். மனித ஜீவன். எல்லாரையும்போல கடவுளின் குழந்தைதான். அவளுடைய உழைப்புத்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு. அந்த உழைப்பிற்தான் நாடு வாழ்கிறது. ஆனால் அவள்...அதோ இளம்பெண் அவள். வயது அளிந்த உற்சாகத்தோடு வேலையின் விரைவு, அந்த வாழ்விலும் ஒரு துடிப்பு. இதோ இவள் தன் வனப்பை, இரத்தத்தை ... எல்லாம் இழந்துவிட்டு சுமக்கமுடியாத கூடைச் சுமையுடன் சிரமப்படுகிறாள். இவள் கிழவி. இந்த வயதிலும் அவள் இயங்காவிடில் அவளது காலம் நகராது, இந்த இருவருக்குமிடையே தான் எவ்வளவு இடைவெளி, நாடு அவளது உழைப்பை உறிஞ்சிவிட்டு அவளை வீசிவிட்டது. இன்னும் சில நாட்களில் நாதியற்று அவள் வீதிக்கே வரக்கூடும்...

கறிவேப்பிலைகளைப் பயன்படுத்தியபின் எறிவதுபோல இதனை அடித்தளமாகக் கொண்டு "கறிவேப்பிலைகள்" என்ற தலைப்பில் கதை எழுதவேண்டுமென்பது என் நெடுநாளைய ஆசையாக இருந்தது. இடையில் அது கனவாகவே.வேறு இடத்தில் மலர்ந்துவிட்டது.

இப்போது பழைய நினைவுகள்.

அறுபட...

மாத்தளை பஸ் நிலையத்தில் இறங்குகிறேன். மாத்தளை என்றதும் இளைஞர் வட்டத்துக்கு உடனே நினைப்பு வருபவர் வடிவேலன், ஏன் மலையகம் என்றதுமே இலக்கியத்துறையுடன் பரிச்சயமுள்ளவர்களுக்கு நினைவில் முந்துபவர் அவர், மலையகத்தின் புதிய தலைமுறையின் முன்னணி நாயகர்களில் ஒருவர் மாத்தளை வடிவேலன்,



படைப்பவர் —மாத்தளை வடிவேலன்

சில நாட்களுக்கு முன் அவர் மீது எனக்கு சிறிது கோபம், நான் எழுதவேண்டும் என்று பலநாட்கள் கனவுகண்ட 'ஐடியா'வை அவர் எழுதிவிட்டாரே என்பதுதான். அந்தச் சிறிய கோபத்தை பெரிய மகிழ்ச்சி மூழ்கடித்துவிட்டது!

மகிழ்ச்சியா? என்னது என் பிரமை!

'கறிவேப்பிலைகள்' என்ற மாத்தளை வடிவேலனின் கதை, உணர்ச்சிபூர்வமாக எழுதப்பட்ட தரமான கதை, அனுபவ வார்ப்பு, நான் எழுதியிருந்தால் உயிரற்ற வெறும் சடலமாக இருந்திருக்கும், எனக்கு உயிர்கொடுத்தவர் போல் ஆனார், அந்த மகிழ்ச்சியில் அவர்மீதிருந்த கோபம் பஞ்சாகிப் பறந்துவிட்டது.

ஒரே சிந்தனை இருவர் மனதிலும் தோன்றியிருக்கிறது. அவர் உயிரோடு படைத்து வென்றுவிட்டார்! நான் உடல் கூடப் படைக்காது தோற்றுவிட்டேன். ஒருவகையில் வென்றவரைப்பற்றி தோற்றவன் எழுதும் கட்டுரை இது...

ஆசிரியர் வடிவேலனைச் சந்திக்க மாத்தளை இந்துக் கல்லூரிக்குச் சென்றேன். அன்று அவர் லீவில் சென்றிருந்தார். விடாக்கண்டன் நான். அவரது வீட்டு விலாசம் வழிகாட்ட நோர்த் மாத்தளையிலுள்ள கவுடுப்பெல்ல தோட்டத்திற்குச் சென்றேன். அங்கு அவரைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமாக இருக்கவில்லை. ஒரு சின்னப் பிள்ளையைப் பிடித்து வடிவேலன் மாஸ்ரரைக் காணவேண்டுமென்றால் போதும் பிடித்திழுத்துக்கொண்டு போய் அவர் முன்னால் விட்டுவிடும். அந்தத் தோட்டத்தில் மட்டுமல்ல மாத்தளையிலேயே பலரது அன்பையயும் அபிமானத்தையும் பெற்றுள்ளவர் அவர். தனது பணியால்...... இத்தனை இளம் வயதிலேயே மலையகத்து இளைஞர்களின் அன்பினையும் செல்வாக்கினையும் பெற்றுள்ளவர்.

சுற்றிவர ஏதோ ஒரு பிரச்னையில் குழம்பும் தொழிலாளர் கூட்டம். நடுவில் கறுத்த உருவ வடிமான-கம்பீரமான-கண்ணாடியூடு தெரியும் கம்பீரப்பார்வையோடு நின்று ஏதோ ஆலோசனைகூறி வாழத் துடிக்கும்- வழியற்றுத் தவிக்கும் மக்களை ஆற்றுப்படுத்திக் கொண்டிருப்பவர்...

'அவர் தான் வடிவேலன் மாஸ்ரர்' என்கிறான் சிறுமி

ஆச்சரியம் ஓர் புறம்.

அவர்தான் எழுத்தாளர் மாத்தளை வடிவேலனா?

பெருமிதம் மறுபுறம்,

(7 ம் பக்கம் பார்க்க)

---

# எண் சோதிடத்தில் உங்கள் வார பலன்

[1-7-1979 முதல் 7-7-1979 வரையுமுள்ள காலபலன்.]

இப்பலன்கள் பிறந்த தேதி எண்ணைக் (அதிர்ஷ்ட எண்) கொண்டே பார்க்கவேண்டியது ஆண்டு. மாதம், திகதி மூன்றையும் கூட்டிய கூட்டெண்ணுக்கும் [விதி எண்] பொருந்தும். பெயர்எண் மற்றமெண்களும் சரிவர அமையுமானால் இப்பலன்கள் கூடுதலாகவே நடக்கும்.

இவ்வாரத்துக்குரிய பூர்வ ஜென்மத் தொடர்பு எண்-6. விதி எண்-7. அதிர்ஷ்ட எண்-1. ஊழ் எண்-8. வினை எண்-7. நியதி எண்-1 நியம எண்- 3 ஆக அமைகின்றது.

இந்த வாரம் உலக அரங்கில் அமைதியான நிலை தோன்றினும் இங்கட்கிழமை சிறுசிறு வன்செயல்கள், விபத்துக்கள் ஏற்படலாம். திங்கட்கிழமை எவ்விதமான நற்கருமங்களும் தொடங்குதல் கூடாது, செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் நற்காரியங்கள் செய்ய உத்தமம், இந்த வாரத்தில் பிறக்கும் பிள்ளைகளுள் வெள்ளிக்கிழமை பிறக்கும் குழந்தை கூடிய அதிர்ஷ்டம் நிறைந்திருக்கும்.

## எண் 1

இவர்களுக்கு இந்த வாரம் புகழுக்கேற்ற அதிர்ஷ்டம் இருக்காது. யோக்கியதை உயரும், ஏமாற்றத்திற்கு இடம் உண்டாகலாம். எதிலும் முன்யோசனையுடன் நடந்துகொள்ளவும். சத்துருக்களால் கவலை ஏற்படலாம். உடல்நலம் பாதிப்படையும்.

குடும்பத்தில் அன்புக்கும் அமைதிக்கும் இடமுண்டு. பதுப்பிரியர்கள் இந்த வாரம் கூடிய கவனம்வேண்டும் பதுமயக்கத்தால் கெடுதிகள் ஏற்படலாம்.

## எண் 2

இவர்களுக்கு இந்த வாரம் உயர்ச்சியான நிலை தோன்றிச் சடுதியாகக் கீழே விழுந்தவும் பார்க்கும். நண்பர்களால் கஷ்டநஷ்டம் ஏற்படலாம். எதிர்பார்த்த வரவில் முட்டு ஏற்படலாம். கொடுக்கல் வாங்கல்களில் கவனமாக இருக்கவும் தொழிலில் ஓரளவு முன்னேற்றம் காணும். பிறநாட்டுச் செய்திகளால் நன்மை ஏற்படலாம். உறவினரால் கஷ்டமுண்டு. குடும்பத்தில் சந்தோஷமுண்டு.

## எண் 3

இவர்களுக்கு இந்த வாரம் பொதுஜன ஆதரவு உண்டு. புதுப்புதுக் கருத்துக்கள் மனதில் தோன்றும். காரிய அனுகூலம் உண்டு. தொழில்முறைகளில் முன்னேற்றம் காணும். நண்பர்களின் உதவிகள் கிட்டும். சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். உறவுமுறைகள் பலைப்படும், குடும்பத்தில் சந்தோஷமிராது. பிதா வழிப் பெருமையுண்டு. சிலருக்கு உடல்நலமும் திருப்தியாக இருக்கமாட்டாது.

## எண் 4

இவர்களுக்கு இந்த வாரம் தெய்வ அனுக்கிரகம் முன் துணைபுரிகிறது. அருளோடு பொருள் சேரும். எதிரிகளின் மனமாற்றத்தால் நன்மைகள் ஏற்படும். எனினும் வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்பட இடமுண்டாகலாம், விசுவாசமில்லாத நண்பர்களால் கஷ்டமும் ஏற்படலாம், பிறநாட்டுப் பிரயாணம் ஏற்படவும் இடமுண்டும். சிலருக்குப் பிரிவால் துயர் ஏற்படலாம். போக்குவரத்துச் சேவைகளில் கடமை புரிபவர்களுக்கு உயர் பதவிகளும் சலுகைகளும் கிடைக்கும்.

## எண் 5

இவர்களுக்கு இந்த வாரம் நீண்டநாள் நினைவு ஒன்று நிவர்த்திபெறலாம், மேன்மைக்குரிய காரியங்களிலே ஈடுபாடு கூடுதலாக இருக்கும் சிந்தனா சக்தியும் கூடுதலாகும் லாபநஷ்டத்தைக் கவனியாது காரியத்தைச் சாதிப்பார்கள், குடும்பத்தில் சந்தோஷ காரியங்கள் நிகழக்கூடும். பெண்களினால் மனோ உற்சாகமான உதவிகள் கிட்டும், சிலருக்கு உஷ்ணம் சம்பந்தமான வியாதி ஏற்படலாம்.

## எண் 6

இவர்களுக்கு இந்த வாரம் எதிர்பாராத நிகழ்ச்சிகள் வாழ்க்கையைப் பாதிக்கும். நெஞ்சம் குமுறும் தன்மை ஏற்படலாம். சிலருக்குஎதிர்ப்புகள் ஏற்படினும் அதனை முறியடிக்கக் கூடிய சக்தியும் ஏற்படும். தருணத்தில் நண்பர்கள் உற்ற துணைபுரிவார்கள். தொழிலாலே தொல்லைகள் ஏற்படலாம். குடும்ப சுகம் ஓரளவு மத்திமமாகவே இருக்கும் ஆடம்பர வாழ்க்கைகூடுதலாக இருக்கும்.

## எண்-7

இவர்களுக்கு இந்த வாரம் சுமுகமான அமைதி நிலவும். பொதுவாக வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு, அநேக பிரயாணங்கள் ஏற்படலாம். புதியதோர் உற்சாகமேற்படும். கருமங்களில் வெற்றிகிட்டும், பணப்புழக்கம் கூடுதலாக இருக்கும், செல்வாக்கு அதிகரிக்கும், உத்தியோகத்தர்களுக்கு பதவி நன்மை, மேலாட்களின் புகழ்ச்சி கிட்டும் குடும்ப வாழ்க்கையில் சிலருக்குச் சில சிக்கல்கள் ஏற்படலாம்.

## எண் 8

இவர்களுக்கு இந்த வாரம் எதிர்பார்த்திராத வெற்றிகள் கிடைக்கலாம், மகிழ்ச்சிகரமான செய்திகள் கிடைக்கலாம், எனினும் பணமுடை ஏற்படக்கூடும். பெண்கள்வழி ஆதரவு கூடுதலாக இருக்கும், குடும்ப நலனில் அக்கறை கூடுதலாக இருக்கும். செல்வாக்குள்ள சில நண்பர்களின் உதவி கிடைக்கும். பிரயாணங்களும் ஏற்படலாம், சிலருக்கு உஷ்ணம் சம்பந்தமான நோய்க்கு இடமுண்டு, எக்கருமத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்ளவும்.

## எண் 9

இவர்களுக்கு இந்த வாரம் பெரியோர்களின் ஆதரவு கிட்டும், புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவார்கள், புத்திரர்களால் பெருமையுண்டு. பிரயாசத்துக்கேற்ற ஊதியம் கிடையாதபோதும் மனம்சளையாது உழைப்பார்கள். அதனால் புகழ் ஏற்பட இடமுண்டு அரசியல் வாதிகளுக்கு அனுகூலமுண்டு. வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம். வயிற்றுக் கோளாறு சம்பந்தமான நோய் உண்டாகலாம், எதிரிகளை விட்டு அவதானம் வேண்டும்.

'வரகி,

சி. அ. செல்வத்துரை
கூளாவடி
ஆனைக்கோட்டை

## இன்று நூல் வெளியீடு

# பண்டிதமணி கண்ட ஆறுமுகநாவலர்

சைவ தமிழ்ப் பேரறிஞர் என்று தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டுகின்ற எங்கள் குருநாதர் பண்டிதர் ஐயா அவர்களுக்கு (இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை) இலங்கைப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதி என்ற கௌரவப் பட்டத்தினை வழங்க முன்வந்த செய்தியை அறிஞர் உலகு பாராட்டியது; மகிழ்ந்தது. அவரைப் பின் தொடர்பவர்களுக்கு இம் மகிழ்ச்சி இரட்டிப்பாயிருந்தது.

### 'கலைமகள்' பாராட்டு

1978ம் ஆண்டு அக்டோபரில் வெளியான- கலைமகள் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு அமைந்ததை ஓர் உதாரணத்துக்கு எண்டுக் குறிப்பிடுதல் மிகையாகாது

"ஆண்டு முதிர்ந்து பழுத்த பழமாக மிளிரும் பண்டிதமணி அவர்களைச் சமீபத்தில் இலங்கைப் பல்கலைக்கழகம் டாக்டர் என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இலங்கைவாழ் தமிழர் ஒவ்வொருவரும் இதனால் பெருமகிழ்ச்சி அடைந்திருக்கிறார் எல்லா வகையாலும் தகுதி பெற்றவருக்கு இந்தப் பட்டம் கிடைத்தது வியப்பன்று. இதனால் பல்கலைக்கழகமே மதிப்பைப் பெற்றது என்று சொல்ல வேண்டும்

"பண்டிதமணி கணபதிப் பிள்ளையவர்களின் பேனாவும் நாவும் ஆற்றலுடையவை எதற்கும் அஞ்சாமல் தம் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் நாவலர் அவர் எதையும் காரணகாரியத் தொடர்புடன் தெளிவுபடுத்தும் பேனாவலரும் ஆவார்" என்று கலைமகள் தலையங்கம் கூறுகிறது.

### உபவேந்தர் பாராட்டு

1978ம் ஆண்டு வைகாசி மாதம் முப்பத்தோராம் திகதி புதன்கிழமை மாலை பிரசித்தி பெற்ற பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இலங்கைப் பல்கலைக்கழக வேந்தர் (இலங்கைக்குடியரசின் ஜனாதிபதி கௌரவ ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில்) நடைபெற்ற பட்டமளிப்பு விழா வைபவத்தில் பண்டிதர் ஐயாவைப்பற்றிய அறிமுக வுரையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தரான (அப்பொழுது யாழ் வளாகத் தலைவர்) பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் இரத்தினச்சுருக்கமாய் குறிப்பிடும்போது "இந்தநாட்டிலே தமிழ் சமயத்தினையும், பண்பாட்டினையும் பாதுகாக்க அரும்பாடுபட்ட ஆறுமுகநாவலர் தனக்கென ஒரு மரபினை யும், அம்மரபினைப்பேணும் நல்லறிஞர் வரிசையினையும் உருவாக்கிவிட்டார். அந்தவரிசையில் வந்தவர் அறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆவர். யாழ்ப்பாணக் கலாச்சாரத் தூதராகவும், கல்வியின் தூதராகவும் விளங்கும் பண்டிதமணி அவர்கள், ஆறுமுகநாவலா எவ்வாறு தனக்கென ஓர் அறிஞர் குழாம் வரிசையினை உண்டாக்கினாரோ, அதே போல இன்று இந்நாட்டில் பண்டிதமணி அறிஞர் குழாம் ஒன்றினை உருவாக்கியுள்ளார். "பண்டிதமணியிடம் பயின்றோம்" என்று கூறுவதிலே இவர்கள் பெரிதும் பெருமையடைவர்.



**அ. பஞ்சாட்சரம்**

(காரியதரிசி, பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை)

",இவ்வாறு தனக்கென ஒரு பரம்பரையை உண்டாக்கியவரும் வாழ்நாள் முழுவதையும் சமயத்துக்கும் இலக்கியத்துக்கும் அர்ப்பணித்தவருமாகிய பண்டிதமணி அவர்களுக்கு, அவர்சமுகமளிக்காத நிலையில் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்குப்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்" என்றார்.

கொழும்பில் வழங்கிய குறித்த இலக்கிய கலாநிதிப் பட்டம் பண்டிதர் ஐயா வாழ்ந்துகொண்டிருக்கும் திருநெல்வேலியை நாடித் தேடிவந்தது.

### யாழ்.வளாக விழா

வரலாறுகாணாத மாபெரும் விழாவைப் பேராசிரியர் கலாநிதி திரு. சு. வித்தியானந்தன் அவர்கள் தலைமையில் யாழ்.வளாகம்25-6-78ஞாயிறு மாலை எடுத்தது. கௌரவ இலக்கிய கலாநிதி பட்டத்துக்கான சான்றிதழைப் பேராசிரியர் கலாநிதி திரு சு. வித்தியானந்தன் அவர்கள் வழங்கியதையடுத்து பண்டிதர் ஐயா அவர்கள் உரையாற்றுகையில் "திரிகரணசுத்தியும் காரியசித்தியும் அருள்வாய்; என்றகுறிக்கோள் மந்திரத்தோடு தோன்றியது பரமேசுவரா. எவர்கள் இக்கௌரவத்தை வழங்க வெகுகாலம் முயன்றார்களோ அவர்கள் காலத்திலேயே அவர்களுக்கு ஊடாகக் குறிப்பிட்ட பட்டத்தை இந்த மண்ணில் நின்று பெறுதற்கு வாய்த்த வாய்ப்பை என்ன என்பது! தெய்வ சங்கற்பம் இருந்தவாறு" என்றார்கள்.

### சிந்தனைக் களஞ்சியம்

முன்னர் குறிப்பிட்ட இருப்புக்கொள்ளாதவர்களின் ஆவலின் சின்னமாயமைந்தது. 14-8-78-ல் வீரசிங்கம் மண்டபத்தில் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் தலைமையில் நடைபெற்றபாராட்டு விழா. இவ்விழாவின் சிறப்பம்சமாய் வெளிவந்தது சிந்தனைக் களஞ்சியம்.

"பண்டிதமணி அவர்களின் சிந்தனைக் களஞ்சியம் என்னும் நூல் ஓர் அறிவியற் சிந்தாமணி. வற்றாத ஞானவாரிதி. இன்பக் கொள்கலம். இன்னும் சுருக்கமாகச் சொன்னால் சூரபன்மனின் முன்னர் தோன்றிய திருப்பெருவடிவம் போல்வதோர் உருத்திகழ் சொல்லோவியம். பலகால் பார்க்கினும் தெவிட்டற்றில்லை என்பதே கூறத்தக்கது. வாங்கிப் படித்து, மீண்டும் படித்துப்படித்து வளரும் தமிழ் உலகம் உய்தி பெறுக" என்பது சிந்தனைக் களஞ்சியம்பற்றி வெளிவந்த பல விமரிசனங்களில் ஒன்று.

### தென்மராட்சிச் சிறப்பு

பண்டிதர் ஐயா அவர்களது தந்தையார் தாயார் இரண்டு பேரும் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இலங்கைத் தமிழ் மக்கள் சரித்திரத்தில் முதல்முதலாகப் பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநிதி என்ற பட்டத்தினைப் பண்டிதர் ஐயா அவர்களுக்கு வழங்கியதில் கூடிய மகிழ்ச்சி தென்மராட்சிப் பகுதியினருக்கு இருந்திருக்கும் என்பதுவெளிப்படையானது.

"ஈன்ற பொழுதிற் பெரி
துவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட
தாய்"

### ஆறுமுகநாவலர்

பண்டிதர் ஐயா அவர்கள் நாவலர் பற்றி எழுதிய கட்டுரைகள் அநேகம் நாவலர்பற்றிய நூல்களுக்கு எழுதிய விமரிசனங்கள் பல இவற்றைப் படித்துப் பயன்பெற்றவர்கள் அக்கட்டுரைகளில் பல புதிய உண்மைகளை ஐயா அவர்கள் எடுத்துக்காட்டியதையும் வரவேற்றனர். நாவலர் சரித்திரங்கள் பல பல வெளிவந்திருந்தபோதிலும் உண்மைச் சரித்திரம் ஒன்றைப் பண்டிதர் ஐயா எழுதுதல் அவசியம் என்று அறிஞர் உலகு வேண்டுகோள் விடுத்தது. புதிய சரித்

(9-ம் பக்கம் பார்க்க)

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

## எரியும் பிரச்னைகளில் . . .

இலக்கியம் சமூகப்பணியாற்றவேண்டும். அதற்காகத்தான் எழுதுகிறோம் என்கின்ற பல எழுத்தாளர்களை-எனக்குத் தெரியும். சமூகத்தையே பார்க்காதவர்கள். ஏதோ எழுதுவதைத்தவிர சமூகத்துக்கென்று தம்மை வருத்தி எதுவுமே செய்யாதவர்கள் மக்களோடு மக்களாக வாழ்ந்து மக்கள் பிரச்னைக்கு சேர்ந்து முகம் கொடுக்காதவர்கள் மக்களின் சுபீட்சத்துக்காக எதுவுமே செய்யாதவர்களே நாலு சுவருக்குள் காற்றாடியின் கீழ் அமர்ந்து புரட்சி எழுதுபவர்கள் புதுயுகம் என் பார்கள் தாங்கள்தான் மக்கள் எழுத்தாளர் என்பார்கள்.

உண்மையான மக்கள் எழுத்தாளனை நான் கண்டேன். வடிவேலனின் கதைகள் உயிருள்ளவையாக அமைவதற்கு அது ஒரு காரணம். தன்னைச் சூழவுள்ள பிரச்னைகளுக்கு பாத்திரங்களுக்கு இலக்கிய வடிவம் கொடுக்கிறார் இல்லாத ஒன்றை- தனக்குத் தெரியாத ஒன்றை அவர் எழுதவில்லை எந்தத் தத்துவத்தினூடாகவும் அவர் உலகத்தை பார்க்கவில்லை; தன் இதயத்தினூடாகப் பார்க்கிறார். இதயமற்றவர்களால் இது முடியாது.

தொழிலாளர்களை தற்காலிகமாக அமைதிப்படுத்திவிட்டு என்னைவரவேற்கிறார்.

நான் வந்த கருமத்தில் கண்ணாகிறேன்.

மலையகத்தின் சூழல்தான் எழுதும் ஆர்வத்தைத் தந்தது என்கின்ற வடிவேலன், மக்களின் பிரச்னைகளைக் கண்டும் நமக்கென்ன என்று இருந்துவிடாது முகம் கொடுக்கும் இளைய தலைமுறை 1960 அளவில் தோன்றியது விளைவாக புதியதொரு இலக்கியப் பரம்பரையே உருவானது. இராமையா- திருச்செந்தூரன் இவர்களது தொடர்ச்சியே நாம் என்று கூறுவதில் பெருமிதமடைகிறார்.

அரசியலைப்போல இலக்கியத்துறையிலும் குடும்பம் தவிர வேறு எவரும் முன்னுக்கு வரக்கூடாதென்று பல வழிகளிலும் முனைகின்றவர்கள் இருக்கின்றார்கள் மலையக இலக்கிய முன்னோடிகள் என்ற பெயரில்... தளிர்ப்பவர்களை கொழுந்து போல் கிள்ளுவது அவர்கள்வேலை கொழுந்து கிள்ளுவதால் செடியே அழிந்துவிடுவதில்லையே.

அவர் மறைமுகமாகச் சொல்வது எனக்கு வெளிச்சமாகப் புரிகிறது; உள்ளூரச் சிரித்துக் கொள்கிறேன். எழுபதாம் ஆண்டளவில் இலக்கியத்துறையுள் நுழைந்த வடிவேலன் இதுவரை இருபத்தைந்துக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியிருக்கிறார். இவரது 'ஆணி' கதை சென்ற ஆண்டின் முதற்காலாண்டு வெளிவந்த ஈழத்துச் சிறுகதைகளில் சிறந்ததாக 'தகவம்' தால் தேர்ந்தெடுக்கப்பட்டது. செய்தியில் வெளிவந்த தரிசனம் இவரது முதற்கதை. சாமி பார்க்கும் சன்னாசி தோட்டத்தொழிலாளி தெய்வநம்பிக்கையுள்ள கணக்குப்பிள்ளை பகலில் சன்னாசியைப் பேசுவார் தாறுமாறாக... இரவு சாமிபார்க்கும்போது சன்னாசி கணக்குப்பிள்ளையைப் பேசுவான் தாறுமாறாக... கணக்குப்பிள்ளைக்கு கடவுள் தரிசனம் கிடைக்குமோ இல்லையோ சன்னாசிக்கு (இலகுவாகப் பாக்வெட்டக்கூடிய) ஒட்டுமலை கிடைக்கும் என்று கதை முடிகிறது சிரிப்பு வருகின்றபோதும் ஆழ்ந்து நோக்கின் கருத்தும் வரும்.

பிரச்னை பற்றி ஆழமான அறிவின்மை, சமூகப்பார்வையில் பூரணத்துவமின்மை இவைகாரணமாக ஆரம்பகாலக்கதைகளின் குறைபாடுகள் நீங்கி இப்போதைய அவரது கதைகளைப் பார்க்க வேண்டுமே."கறிவேப்பிலைகள்" கதையே சாட்சி.

பேனாவை மட்டும் 'பெரிதாக' தூக்கி வைத்துக் கொண்டு இதோ எனது கதைகள் சமூகத்தில் புரட்சி உண்டாக்கும்; சமூகத்தை மறுமலர்ச்சி செய்யும் என்று பேசி புகழ்தேடும் சங்காத மக்கள் தொண்டராக இல்லாமல் தொழிலாளர்களுடன் இணைந்து அவர்கள் பிரச்னைகளில் முகம் கொடுக்கிறார் வடிவேலன். இளைய மலையகத்தினரை வர்க்க ரீதியில் கட்டி எழுப்ப நாளும் பொழுதும் பாடுபடுகிறார். தொழிற் சங்கப் பிளவுகளில் சிக்கித் தவிக்கும் தொழிலாளர்களை வர்க்க உணர்வு பெற்று ஓரணியில் திரட்டும் வகையில் செயல்படுகிறார். இலக்கியம் ஒரு கருவியே தவிர முழுமையாக அது மட்டுமே கருவி என்றில்லை. செயல்... செயல் அதுதான் தேவை; வெறும் எழுத்தை விட்டு எழுத்தாளர் சமுதாயமாற்றத்தில் உண்மை அக்கறை இருக்கு மென்றால் எழுதுவதோடு செயலிலும் இறங்க வேண்டுமென்றார்.

நாங்கள் கதைத்துக்கொண்டிருந்தபோது வந்துபோன பிரச்னைகளிலிருந்து தாழ்ந்த அச்சமூகம் தலையெடுக்க அவரது பங்களிப்பு. தனது சமூகத்தின்மீது அவர் கொண்ட நேசிப்பு நெஞ்சை நெகிழ வைத்தது.

கடலாடும் கரைதனிலே கலங்களாட... என்ற தலைப்பில் குருநகரிலே நடந்த கவியரங்கில் வடிவேலனின் பாடல் இப்போதும் என் காதுள் ஒலிப்பது போல் நெஞ்சுள் குமுறுவது போல் இருக்கிறது. காலன் பசியைக் கணமேனும் தடுக்க ஓடி உயிரை உடலோடு அணைக்க... என்று விரியும் கவியரங்கக் கவிதை குன்றுகளில் குமுறுகின்ற குலங்களது துயரங்களை வென்றெடுக்க என்ற தலைப்பில் பாடியது 'குன்றின் குமுறல்' என்ற கவிதைத் தொகுதியினை வெளியிடவுள்ள இவர் மாத்தளை இலக்கிய வட்டத்தின் அமைப்பாளர். சிறந்த பேச்சாளர்.

தேயிலை உற்பத்திக்காக வாழ்க்கையையே தியாகம் செய்துள்ள மலையகத்தவரின் பிள்ளைகள் மலிந்த தண்ணி குடிக்கிறார்களே தேயிலைக்கு வழியற்று என்று மலையகத்தின் தளிர்களை எண்ணி வேதனைப் படும்வடிவேலன், அந்தப்பிஞ்சுகளின் வாழ்க்கை அவலத்தை 'பிஞ்சு உலகம்' என்ற கதையாக சித்தரித்தார் - வீரகேசரி நடத்திய நான்காவது மலையக சிறுகதைப்போட்டியில் முதற் பரிசு பெற்றது. சிங்களத்திலும் மொழிபெயர்த்து வெளியிடப்பட்ட இக்கதை உள்ளத்தை உலுக்கி உணர்ச்சியில் துடிக்கவைக்கும் கதை.

வழக்கொழிந்து வரும் மலையக நாடோடிக்கதைகளை எழுதித் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள வடிவேலன் கல்வித் துறையில் பட்டப்படிப்பையும் மேற்கொண்டுள்ளார். புதுக்கவிதை எழுதுவதிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு. அதற்காக புதுகுழி, நான் படுக்கப்போகிறேன், என்னைக் சாகவிடுங்கள் என்று கலியாணக்கனவு வெறுப்பில் பாடுபவர்களைப்போல் அல்லாமல் இருக்கிறவர்களைப் போல் இல்லாமல் துடிப்புமிக்க போர்க்குரல்களாக - இறை கவல்களாக அவை இருக்கின்றன. ஒன்றைப் பாருங்கள் இரைதேடும் வௌவால்களே... இலையுதிர் வந்ததென்று ஏகாந்தம் பறந்தீர்கள், இளந்தளிர் அரும்புகையில் மின்சாரக் கம்பிகளில் சிக்கி நீங்கள் தொங்கும் போது வசந்தத்தின் வாயில் புன்னகை பூப்போம்... என்ன உறுதி; என்ன சம்பிரம். ஒரு சோறு பதமல்லவா?

தொடுவானம் என்று ஒரு நாவலும் செய்தியில் எழுதியிருக்கிறார். முதல் முயற்சி வழக்கம் போல் காதல் கதை தான் என்றாலும் இந்தச் சமுதாய அமைப்பில் காதல் கூட பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் எப்படி பொருளற்றுப் போகிறது என்பதை எடுத்துக் காட்டும் முயற்சியாகவே அமைந்தது.

நாடகத்துறையிலும் இவருக்கு ஆர்வம். மாத்தளைசாஹிராக் கல்லூரியில் உயர்தரவகுப்பு படிக்கும் போதே நாடகப் போட்டி பேச்சுப்போட்டிகளில் பரிசு பெற்றுள்ளார். அக்கினிப்பூ நாடகத்தை மறக்கமுடியுமா? எரியும் பிரச்னைகளில் அக்கினிபூவை மலர வைத்த இவர், புதியதோர் உலகம் என்ற இசைநாடகத்தை அந்த உலகம் காணப் படைத்தார். பல நாடகங்களை உருவாக்கிய வடிவேலன் சிறந்த நடிகரும் கூட அந்நிலைகளைக் கண்டு அவர் குமுறுவார். அதை அவர் விவரிக்கும்போது மனிதர் படும்பாடு நடிப்புப் போல இருக்கும் ஆனால் அது உண்மை என்பது குழந்தைத் தனமான அந்த மென்மை உள்ளத்தோடு உறவாடுபவர்களுக்குத் தான் தெரியும்.

தாழ்ந்து கிடக்கும் மலையக சமூகத்தில் ஒரு விழிப்புணர்ச்சி மறுமலர்ச்சி தோன்ற வேண்டும். அநியாயமாக ஏமாந்து அப்பாவிமக்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள்; தடுத்து நிறுத்த வேண்டும். இளைய மலையகம் எழுச்சி பெற வேண்டும் சகல துறைகளிலும்... இப்படி இப்படி பல ஏக்கங்களை அவரது கதைகளின் ஊடாக அறிந்திருந்தேன். அந்த நல்ல பிசாசுத்தனமான வேட்கை அவரை இலக்குவதை நேரில் கண்டபோது எனக்கு நல்ல நம்பிக்கை.

மலையகத்தில் தோட்டத்துக்கு ஒரு வடிவேலன் தோன்றினால் விடிவு அண்மையில்- மிக அண்மையில்...

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## எடுப்பு முரண்பாடு

எஸ். எஸ். மனோகரன்

[க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களை இன்று பெரிதும் கவர்ந்துள்ள பாடம் 'அளவையியல்' ஆகும். இப்பாடம் அநேக கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் போதிக்கப்படாதபோதிலும், பல கலைக்கழக புகுமுக வகுப்பு மாணவர்களில் பலர் இப் பாடத்தை விரும்பிப் பயிலுவதால் 'அளவையியல்' மாணவர்களின் நலக்கருதி அளவையியலில் மிகப் பிரதானமானதும், கடினமானதுமான 'எடுப்பு முரண்பாடு' என்னும் பகுதிக்கு இலகுவழியொன்றை கட்டுரை ஆசிரியர் இக் கட்டுரை மூலம் விளக்குகிறார்.]

அளவையில் கற்கும் மாணவர்கள் உடன் அனுமான வகையின் ஓர் அங்கமான எடுப்பு முரண்பாட்டில் வரும் இரு எடுப்புக்களுக்கிடையிலான உண்மை. பொய்மைத் தொடர்புகளை விளங்கிக்கொள்வதிலும் அவற்றினைக் கண்டறிவதிலும் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். இச் சிரமத்தினை நீக்கி மாணவர்கள் மிக இலகுவானமுறையில் இவ்வுண்மை பொய்மைத் தொடர்புகளை அறிந்துகொள்வதற்கான வழியொன்று கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

உண்மையோ அல்லது பொய்யோவெனத் தரப்பட்ட ஒரு எடுப்பிலிருந்து அவ்வெடுப்பிலுள்ள அதே எழுவாயையும் பயனிலையையும் கொண்ட ஏனையவாக

### 'அளவையியல்' மாணவர்களுக்கு ஓர் இலகுவான வழி

எடுப்புக்களின் உண்மை. பொய்மைத் தொடர்புபற்றி அனுமானிக்கின்ற நெறியே "எடுப்பு முரண்பாடு" என்பதனை அளவையியல் கற்ற மாணவர்கள் யாவரும் அறிவர். அதாவது A, E, I, O எனும் நால்வகை எடுப்புக்களிடையேயும் நிலவும் உண்மை பொய்மைத் தொடர்புபற்றி உணர்த்துவதே எடுப்பு முரண்பாடாகும். இவ் வடிப்படையில் எடுப்பு முரண்பாட்டில் நான்கு வகையான தொடர்புகள் காணப்படும் என்பதனையும் மாணவர் அறிவர். அவையாவன வழிப்பெறுகை, எதிர்மறை, மறுதலை, உப மறுதலை என்பனவாகும்.

எடுப்பு முரண்பாட்டில் வரும் A, E, I, O எனும் நால்வகை எடுப்புக்களுக்கிடையிலான உண்மை பொய்மைத் தொடர்புகளை மனதில் இலகுவாக வைத்திருப்பது எவ்வாறு? A, E, I, O எனும் நால்வகை எடுப்புக்களில் ஒன்று உண்மையோ அல்லது பொய்யோவென்பது தரப்பட்டால் ஏனையவகை எடுப்புக்களின் உண்மை பொய்மைப் பெறுமானங்களை எவ்வாறு துணிவது? இவ்வுண்மை பொய்மைத் தொடர்புகளை படமாக்கி மனதில் வைத்திருத்தலென்பது மிகவும் கடினமானதும் இயலாதவோர் விடயமுமாகும். பின் வரும் அட்டவணையை மாணவர்கள் பயன்படுத்துவதன் மூலம் இவ்வினாக்களுக்கு மாணவர்கள் ஒரு நொடிப்பொழுதில் விடையளிக்கமுடியும்.

| | A | E | I | O | |
|---|---|---|---|---|---|
| A | உ | பொ | உ | பொ | O |
| E | பொ | உ | பொ | உ | I |
| I | ச | பொ | உ | ச | E |
| O | பொ | ச | ச | உ | A |

#### அட்டவணை

**அட்டவணையை வரையும் முறை:**

[அ] முதலில் ஒரு சதுரத்தினை வரைந்து அதனைப் பதினாறு சிறிய சதுரங்களாகப் பிரித்துவரைக. பின்னர் மேற்பாகத்தில் இடமிருந்து வலமாக A, E, I, O, எனக்குறி. இதுவே அடிப்படைப் பகுதியாகும். இவ்வாறே சதுரத்தின் இடப் பக்கத்தில் மேலிருந்து கீழாக A, E, I. O எனவும் வலப்பக்கத்தில் கீழிருந்து மேலாக A, E, I, O எனவும் குறி.

[ஆ] பின் பெரிய சதுரத்தின் இடப்பக்க மேல் மூலையிலிருந்து வலப்பக்க கீழ் மூலைவரை குறுக்காக உள்ள சிறிய சதுரங்களில் 'உ' எனும் எழுத்தை இடுக.

[இ] பின்னர் வலப்பக்க மேல் மூலையிலிருந்து இடப்பக்க கீழ் மூலைவரை குறுக்காக உள்ள சதுரங்களில் 'பொ' எனும் எழுத்தினை இடுக.

[ஈ] பின்னர் பெரிய சதுரத்தின் கீழ்ப்பாதியிலுள்ள வெற்றிடமான சிறிய சதுரங்களுக்குள் 'ச' எனும் எழுத்தினை இடுக.

[உ] பின்னர் பெரிய சதுரத்தின் மேல் பாதியில் இரண்டு சதுரங்களைக் கொண்டிருக்கும் நான்கு செங்குத்துப் பெட்டிகளும் தனித்தனி 'உ' எனும் எழுத்தையும் 'பொ' எனும் எழுத்தையும் கொண்டிருக்குமாறு நிரப்பப்படுதல் வேண்டும்.

[ஊ] 'உ' எனும் எழுத்து உண்மை என்பதனையும் 'பொ' எனும் எழுத்து பொய் என்பதனையும் 'ச' எனும் எழுத்து சந்தேகம் என்பதனையும் குறிக்கும். என்பதனை மனதில் தெளிவாக கொள்க.

**அட்டவணையைப் பயன் படுத்தும் முறை**

பெரிய சதுரத்தின் இடப் பக்கத்தில் மேலிருந்து கீழ் நோக்கி எழுதப்பட்டுள்ள A, E, I, O எனும் எடுப்புக்கள் உண்மையானவை எனக் கொள்ளப்படும். A, E, I. O எனும் எடுப்புக்களில் ஏதேனுமொன்று உண்மையெனின் ஏனைய எடுப்புக்களின் உண்மை பொய்மை நிலைமைகளையறிய உண்மையென எடுக்கப்பட்ட எடுப்பை அடிப்படைப் பகுதியிலுள்ள [மேலுள்ள] A, E, I, O எடுப்புக்களுடன் தொடர்பு படுத்தி நோக்குதல் வேண்டும். உதாரணமாக I எடுப்பு உண்மையெனின் O எடுப்பின் நிலையை அறிய முயல்வோம். I எனும் உண்மை எடுப்பு அடிப்படை பகுதியிலுள்ள O எடுப்பை 'ச' எனும் சதுரத்தினுள் சந்திப்பதால் O எடுப்பு சந்தேகமாகும். இவ்வாறே E எடுப்பு உண்மையெனின் அது அடிப்படைப் பகுதியிலுள்ள I எடுப்பை 'பொ' எனும்சதுரத்தினுள் சந்திப்பதால் I எடுப்பு பொய்யாகும்.

இவ்வாறே பெரிய சதுரத்தின் வலப் பக்கத்தில் கீழிருந்து மேல் நோக்கி எழுதப்பட்டுள்ள A, E, I, O எனும் எடுப்புக்கள பொய்யானவை எனக் கொள்ளப்படும், A, E, I, O எனும் எடுப்புக்களில் ஏதேனுமொன்று பொய்யெனின் ஏனைய எடுப்புக்களின் உண்மை பொய்மை நிலைமைகளையறிய பொய்யென எடுக்கப்பட்ட எடுப்பை அடிப்படைப் பகுதியிலுள்ள (மேலுள்ள[ A, E, I, O எடுப்புக்களுடன் தொடர்புபடுத்தி நோக்குதல் வேண்டும், உதாரணமாக A எடுப்பு பொய்யெனின் E எடுப்பின் நிலைமை அறிய முயல்வோம் A எனும் பொய் எடுப்பு அடிப்படைப்பகுதியிலுள்ள E எடுப்பை "ச" எனும் சதுரத்தினுள் சந்திப்பதால் E எடுப்பு சந்தேகமாகும். இவ்வாறே I எடுப்பு பொய்யாயின் அது அடிப்படைப் பகுதியிலுள்ள A எடுப்பை "ச" எனும் சதுரத்தினுள் சந்திப்பதால் A எடுப்பு சந்தேகமாகும்.

மேற்கூறப்பட்ட அட்டவணை மூலம் மாணவர்கள் A E I O. எனும் எடுப்புக்களில் ஏதேனுமொன்று உண்மையோ அல்லது பொய்யோவெனத் தரப்பட்டால் ஏனைய வகை எடுப்புக்கள் அவற்றின் அடிப்படையில் உண்மையோ அல்லது பொய்யோ என்பதனை உடனடியாகக் கண்டுகொள்ள முடியும்.

### மூளைக்கு வேலை

13-5-79-ல் கேட்கப்பட்ட வினாவுக்கான சரியான விடைகள்:

1. 728 2. 2 ரூபா

சரியான விடை அனுப்பியோர்;

தி திருவேணி (உருப்பிராய் இந்துக்கல்லூரி), வே குருபரன் (ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்). செல்வி நளினி செல்லத்துரை (கொக்குவில் இந்துக்கல்லூரி), செ. விஜயரூபன் (நவாலி அரசடி ம வி), எஸ். செல்வகுமாரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), செல்வி த. சுதர்ஜினி [அராலி சரஸ்வதி ம வி), க. நல்லதம்பி [யாழ். பல்கலைக்கழகம்], சோ. கலைச்செல்வன். மு. நித்தியகுலசிங்கம், செல்வி இ. சாரதாதேவி ]புங்குடுதீவு கமலாம்பிகை ம வி], இ யூதாபாலராசா [திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி], ஆ' கயிலாயநாதன் [புங்குடுதீவு ம வி], செல்வி தேணுகா ஜெயரிஸ் [யாழ் வேம்படி மகளிர் கல்லூரி]. செல்வி சித்திரரஞ்சனி மாணிக்கவாசகர் [காங்கேசன் நடேஸ்வராக் கல்லூரி[, எஸ் சிவபாலசிங்கம், கு வசீகரநாதன் [வேலணை ம ம வி], சி திருத்தணிகைநாதன் [ சுளிபுரம் விக்டோரியாகல்லூரி] செல்வி ஜெயந்தி ஜீவரெட்னம் [யாழ் இந்து மாளிர் கல்லூரி], த பாலேந்திரா [மண்டதீவு ம வி], செல்வி ரஞ்சி செந்தில்ராசா [கனகரத்தினம் ம ம வி].

### மாணவியின் கவனயீனம்

6-5 79-ம் திகதிய மாணவ எண்ணத்தில் வெளிவந்த 'மூளைக்கு வேலை' என்ற பகுதியில் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடையை மாணவி ஒருவர் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய ஆசிரியர் திரு. நமசிவாயம் வல்லிபுரத்திற்கு அனுப்பியுள்ளார், ஆசிரியர் வல்லிபுரம் எமக்கு அனுப்பியுள்ளார், மாணவியின் தபால் அட்டையைப் பார்த்ததும் எமக்கு எதுவுமே புரியவில்லை. அதே திகதியில் 'ஈழநாடு வாரமலரில்' ஆசிரியர் - மாணவர் சந்திப்பு' பகுதியில் ஆசிரியர் திரு. வல்லிபுரம் செல்வன் யோ. கிரிதரனுக்கு அளித்த பேட்டி வெளிவந்திருந்தது. அதனாலேயே அந்த மாணவி தமது பதிலை அந்த ஆசிரியருக்கு அனுப்பியிருந்தார் என்பது பின்னரே தெரியவந்தது. எனினும் அவர் விடையை சரியாகவே எழுதியிருந்தார்.

அந்த மாணவி பாடசாலையைக் குறிப்பிடாது தமது முகவரியைப் பின்வருமாறு எழுதியிருந்தார்.

செல்வி புஷ்பராணி நவரத்தினம்

17/1, 2ம், ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,

### தட்சரும் எண் பொருத்தமும்

இங்கிலாந்தின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள திருமதி தட்சரின் வீட்டு இலக்கம் 10, அவர் பொறுப்பேற்றது 73வது பிரதமராக: அதன் கூட்டெண் 10. இப்பொருத்தம் போலவே இன்னுமொன்று தட்சர் பிறந்தது 1925 கூட்டெண் 8, பிரதமராக பதவியேற்றிருக்கும் வயது 53-கூட்டெண்-8. பிரதமராகப் பதவியேற்றது 1979, கூட்டெண்-8, எட்டாம் இலக்கம் எல்லோருக்கும் விசேடமில்லையென்பார்களே.

செல்வி

எஸ். வசந்தமாலா

வேலணை ம.ம வி.

### கிடைக்கப்பெற்றோம்

தமிழ் மறைக் கழகத்தின் 19வது திருக்குறள் மாநாட்டுச் சிறப்புமலர் கிடைக்கப்பெற்றோம்!

அறிவுப்பொழில் மன்றத்தினரால்வெளியிடப்பட்டுள்ள இம்மலருக்கு அறிவுப்பொழில் ஆசிரியர் திரு வை. இராஜேஸ்வரனே ஆசிரியராகவிருக்கிறார்.

இரா. சின்னத்தம்பி, ஆ. நரேந்திரன், செந்தமிழ்ச் செல்வர் புலவர் ஈழத்துச் சிவானந்தன், கா. சிவஞானம், புலவர் வேல்மாறன், மைசூர் மாநில முதல்நிலைக் கல்லூரி தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் வ. பெருமாள் ஆகியோரின் கட்டுரைகளும், வே சோமசுந்தரம், பண்டிதர் ஜி. யோ, ஆசிநாதர் ஆகியோரின் கவிதைகளும் மாநாட்டில் கலந்துகொண்டவர்களின் ஆசியுரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. -குகன்

### நெடுந்தீவில்..

]4-ம் பக்கத் தொடர்ச்சி[

இணைந்து 'தமிழ் அன்னல்' என்னும் பட்டத்தை வழங்கினர். நடன, நாடக அரங்குடன் முதல்நாள் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

இரண்டாம்நாள் நிகழ்ச்சிக்கு திரு இரா சின்னத்தம்பி தலைமை வகிக்க திரு, இரா ஜெயராஜா வரவேற்புரை நிகழ்த்தினார். அன்றையதினம் உரை நிகழ்த்திய கலாநிதி ஆ. சண்முகதாஸ் வள்ளுவரின் எதிரேதிர் நிலைகளை எடுத்துக்காட்டினார். கற்றலையும் அதன்படி நிற்றலையும் சுவைபட விளக்கினார். வள்ளுவரின் தோற்றத்தால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை திரு. ஆ சிவநேசச் செல்வன் போற்றும் வகையில் எடுத்துக்கூறினார். விரிவுரையாளர் திரு, எஸ் நடராசா கல்வித்தத்துவம் பற்றி திருவள்ளுவர் கூறிய தீஞ்சுவைக் கருத்துக்களை கூறினார். வள்ளுவன் பெண்ணினத்தைப் பற்றிக் கூறிய கருத்துக்களை இக்காலப் பெண்மணிகளுடன் ஒப்பிட்டு திருமதி ம. சண்முகதாஸ் சொற்பெருக்காற்றினார்.

உதவி அரசாங்க அதிபர் திரு வை. சொக்கலிங்கம் வள்ளுவர்காட்டிய காமத்துப்பாலில் காணக்கூடிய இன்பங்களை அகத்துறை இலக்கியங்களோடு ஒப்பிட்டுக்காட்டினார்.

எழுத்தாளர் சொக்கனின் தலைமையில் 'வள்ளுவர் காட்டிய பொருளியல் பாதை பொதுவுடமை' என்னும் தலைப்பில் நடந்த பட்டிமன்றத்தில் சூடான விவாதமும் சுவையான கருத்துக்களும் கேட்டோருக்குக் கிடைத்தன. சார்பணியிலும் எதிரணியிலும் பண்டிதர் க. குகதாசன், திரு. ந. சுட்பிரமணியம், திரு. முத்து சிவஞானம், திரு வை. சுவாமிநாதன், செல்வி ப. வேலுப்பிள்ளை, திருமதி செ. வரதராசா ஆகியோர் விவாதங்களை நிகழ்த்தி கருத்து விருந்து படைத்தனர். அன்றைய தினம் 'நான் கண்ட வள்ளுவன்' என்னும் தலைப்பில் கவிஞர் முருகையன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது.

நிறைவுரை நிகழ்த்திய பேராசிரியர் ஆறு அழகப்பன் நெடுந்தீவின் வரலாற்றுப் பின்னணியை, வாழ்வும் போக்கை வள்ளுவத்தோடு பொருத்தி ஒருமணிநேரம் உரைநிகழ்த்தினார். நெடுந்தீவின் புவியியல் அமைப்பை, சரித்திரச் சான்றுகளை, பழமொழி வழக்குகளை பேச்சுமொழியை நாட்டுப் பாடல்களின் நயங்களுடன் இணைத்தும் சங்க இலக்கிய உவமானங்களோடு திருவள்ளுவரின் குறள்மணிகளைக் கோர்த்து சொல்மாலையை மக்கள் முன் அணிவித்தது பெருஞ் சிறப்பாயமைந்தது.

தமிழ்மறைக் கழகத்தினரும் அறிவுப்பொழில் மன்றத்தினரும் நடாத்திய போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நெடுந்தீவிற்குசிறப்புவிருந்தினராகமாநாட்டிற்கெனமுதன்முதல் வருகை தந்தவர்பேராசிரியர் அழகப்பனே பேராசிரியரை சிறப்புச்சொற்பொழிவுக்கு ஒழுங்குசெய்து உதவியவர் புலவர் ஈழத்துச் சிவானந்தன். பெருஞ்சிரமத்தோடு ஒழுங்குசெய்த காரியத்தை மாநாட்டிற்பாராட்டிமாநாட்டுச் செயலாளர் திரு. சு நடராஜலிங்கம் நன்றியுரைநிகழ்த்தினார். வேல் ஆனந்தனின் நடன அரங்கும், பொன் சுந்தரலிங்கத்தின் இசையரங்கும், கோலாட்டங்கள், நாடகங்கள் ஆகியவற்றின் கலைக்கோலங்களும் திரண்டிருந்த மக்களுக்கு மனநிறைவைக் கொடுத்தன.

நெடுந்தீவில் நடந்த திருக்குறளின் திருவிழா நெடுந்தீவு மக்களின் நெஞ்சங்களில் என்றும் நிலைத்துநிற்கக்கூடியது.

ராஜா 78-வது நாள் தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த
ஒளி விளக்கு
புதிய பிரதி சஸ்மன்கலர்

கொட்டகை நிறைந்த 4-வது வாரம்
REGAL Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

வெலிங்டன தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45.
[யாழ்ப்பாணம்]
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

லிடோ போன் 7694 தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர்
கப்பலோட்டிய தமிழன்

கடைசி வாரம்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - தேவிகா கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
புதிய பிரதி

27-வது வாரம்
வின்சர் போன் 666 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-00, 6-00, 9-30
பைலட் பிரேம்நாத்
(சஸ்மன் கலர்)

2-வது வாரம்
ராணி தினசரி 4 காட்சிகள் (யாழ். நகர்)
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

திரம் ஒன்றை எழுதுவதிலும் இதுவரை நாவலர் சம்பந்தமாய் வெளிவந்த தமது கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிடலாம்; அது சிந்தனையாளர்களுக்கு - ஆராய்ச்சியாளர்களுக்கு உவப்பாயிருக்கும் என்ற அபிப்பிராயத்தை ஐயா அவர்கள் வெளியிட்டார்கள்.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள பழைய மாணவர்களும், அன்பர்கள் அபிமானிகளும் இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவவிடவில்லை. பண்டிதர் ஐயா அவர்களது

# பண்டிதமணி கண்ட...

பிறந்த சமான தென்மராட்சியில் பாராட்டு விழாவினை நடத்துவதுடன் 'ஆறுமுக நாவலர்' நூலையும் வெளியிடுவது என்று தீர்மானம் செய்தனர். அதன் விளைவே இன்றைய பாராட்டுவிழாவும் நூல் வெளியீடும்.

டாக்டர் வர உ. வே. சு ஐயரவர்கள் எழுதிய தொளாயிரம் பக்கங்களைக் கொண்ட மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரத்தில் நாவலர் பெருமானையும், மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களையும் ஓரிடத்திலாயினும் சந்திக்கவைக்காமலே சரித்திரத்தை நடத்திவிட்டார்கள்?

நாவலர் பெருமானுக்குத் திருவாவடுதுறை ஆதீனம் 1949-ல். நாவலர் பட்டம் வழங்கியது. அப்பொழுது மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆதீன வித்துவானாயிருக்கவில்லை.

நாவலருக்கு நாவலர் பட்டத்தை வழங்கிய பின்னரே திருவாவடுதுறை ஆதீனத்திற் பிரவேசித்தவர்கள் பிள்ளையவர்கள். சரித்திரம் இவ்வாறிருக்க நாவலர் பட்டத்தைத் திருவாவடுதுறை ஆதீனம் வழங்கியபோது மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களும் அச்சபையில் இருந்து நாவலர் பெருமானைச் சபையோருக்கு அறிமுகம்செய்துவைப்பதாகவும் நாவலர் அவர்களின் அறிவைப் பரிசோதித்துப் பாராட்டியதாயும் நாடகம் ஒன்றை எழுதிவிட்டார்கள் சுத்தானந்த பாரதியார் அவர்கள். வழக்கு விஷயங்களிலும் நாவலர் சரித்திரம் பெரிதும் திரிக்கப்பட்டுள்ளது. இந்த இடங்களையும் இவைபோன்ற திரிபுகளையும் தக்க ஆதாரங்களுடன் கண்டித்து உண்மை வரலாற்றினை எடுத்துக்காட்டிய இருபத்தேழு கட்டுரைகள் கொண்டதே இன்றுவெளியாகும் ஆறுமுகநாவலர் என்னும் நூல்.

## நாவலர் சரித்திர வளர்ச்சி

நாவலர் சரித்திரத்தை ஆராய்ந்து புதிய புதிய உண்மைகளைக் கண்டுபிடித்த திருவிய காலஞ்சென்ற பேராசிரியர் கலாநிதி ச. தனஞ்செயராசசிங்கம், மக்கல கவிமணி மு. இராமலிங்கம், வித்துவான் எவ் எக்ஸ் ஸி. நடராசா, திரு. ச. அம்பிகைபாகன் முதலானவர்களின் ஆராய்ச்சி உண்மைகளைப் பண்டிதர் ஐயா அவர்கள் இந்நூலில் கூறி அவர்களைப் பெரிதும் பாராட்டியுள்ளார்கள்.

இந்நூல் நாவலர் உண்மைச் சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்று கூறும் பண்டிதர் ஐயா அவர்கள் அநுபந்தக் கட்டுரை வாயிலாக [illegible]களுக்கு ஒரு வேண்டுகோளு[illegible] விடுக்கின்றார். வேண்டுகோள் வருமாறு:

"1864ல் நாவலர் வடக்கே தொடங்கிய இறுதிப்பிரயாணம் 1870ல் முற்றியது. நாவலர் அவர்கள் இங்கேயிருந்து புறப்பட்டுச்சென்றது தொடக்கம் வடக்கே நடந்தவைகளை பூர்வகாண்டமாகவும், மீண்டும் யாழ்ப்பாணம்வந்தபோது நடந்த உபசாரங்களை உத்தரகாண்டமாகவும் கொண்டு இரு காண்டங்கள் கொண்டதொரு பிரபந்தத்தைக் கவிஞர்கள் புனைந்து இனிமைசெய்வார்களாக.

பண்டிதர் ஐயாவினால் அவ்வப்போது நாவலர்பற்றி எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து நாவலர் நினைவு தின நூற்றாண்டைமுன்னிட்டு சிறிய முறையில் பதிப்பித்து நூல்வடிவில் வெளியிடுகின்ற தென்மராட்சிப் பாராட்டு விழாச்சபையினருக்கு நன்றி கூறி அமையாது.

## கள்ளச் சாராய வேட்டை

(மட்டுவில்)

மட்டுவிலில் சாவகச்சேரி பொலிசார் பெரும் கள்ளச் சாராய வேட்டை ஒன்றை நடத்தினர்.

சப் இன்ஸ்பெக்டர் திரு. பீரின்ஸ் வீரக்கோன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று மட்டுவில் தெற்கில் உள்ள பனங்கூடலுக்குள் 96 போத்தல் கள்ளச் சாரயத்துடன் சாராயம் காய்ச்சப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் பாத்திரங்களையும் கைப்பற்றியது.

கனகன் மாணிக்கம், பாலசிங்கம் ஆகிய இருவரையும் பொலிசார் கைது செய்தனர்.


Rio Phone: 7607
(Jaffna) Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THE ARENA
Strictly for adults.
Sex Thrill.

ராஜகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி-சாவித்திரி
கற்புக்கரசி
(புதிய பிரதி)

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சவுக்கடி சந்திரகாந்தா

SHANTHI JAFFNA Daily: 4 Shows
(Phone 7642) 10-30, 4-45, 7-00 & 9-30
The Way We Were — Color Scope
Coming! "MR. MAJESTYK" Adults only—Color
Dont miss this Action Packed Movie.

மனோகரா 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்நகர்) இனிய பாடல்கள் நிறைந்த குடும்பப் படம்
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த இரண்டாவது படம்
25 வருடங்களுக்கு முன் திரையிடப்பட்ட இப்படம் பலரின் வேண்டுகோளுக்கிணங்கவும், இளைய தலைமுறையினர் பார்த்து மகிழவும் மீண்டும் இப்பொழுது திரையிடப்படுகிறது.
சிவாஜிகணேசன்-பத்மினி
காலஞ்சென்ற என்.எஸ். கிருஷ்ணன் தங்கவேலு, டி. ஏ. மதுரம் நடித்த
கருணாநிதியின் பணம்
[புதிய பிரதி]
இதுவே யாழ்நகரில் கடைசித்தடவையாக காண்பிக்கப்படுவதால் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

யாழ்.நகரில் இன்னும் 3 வாரங்கள் மட்டுமே!
என்றுமே யாழ்.நகர் கண்டிராத அதிஅற்புத காட்சிகளைக் கண்டுகளிக்க
யாழ்.கோட்டை மைதானத்திற்கு இன்றே விரைந்து செல்லுங்கள்!
★ அப்பொலோ சர்க்கஸ் ★
தினசரி 3 காட்சிகள்:
பி. ப. 1.00 4-00,7.00
ஞாயிறு விடுமுறை தினங்களில் காலை 10.00 மணிக்கு விசேஷ காட்சி காண்பிக்கப்படும்.
டிக்கட் விபரம்:
ரூபா25-00 ரூபா15 00
ரூபா10-00 ரூபா 5-00
தினசரி காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை ரூபா 25-00 ரூபா 15-00டிக்கட்டுகளை சர்க்கஸ் வளவில் பெற்றுக் கொள்ளலாம்.


வனவிலங்குகளின் அபார சாகஸங்களையும், உலகப்புகழ் மிகு சாகஸ வீரர்களின் மரணத்துடன் போராடும் விளையாட்டுகளையும் கண்டுகளிக்கத்தவறாதீர்கள்!
மறவாதீர்கள்!
ஞாபகமிருக்கட்டும் யாழ்.நகரில் ஜூலை23ல் கடைசித்தினம்.
தொலைபேசி: 8110

## தெல்லிப்பழை துர்க்காதேவி

# உற்சவமூர்த்தி

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் உற்சவமூர்த்திக்கு மகாகும்பாபிஷேக விழாவும் சண்டிகேஸ்வரி பிரதிஷ்டையும் இம்மாதம் ஐந்தாம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத்தில் பூசை நடைபெற்று துர்க்கை அம்பாள் புறப்பட்டு காங்கேசன்துறை வீதிவழியாக நண்பகல் 12-30 மணியளவில் மருதனுமடம் சென்றடைவார்.

மருதனுமடம் இராமநாதன் கல்லூரி நடேசர் ஆலயத்தில் அம்பாள் எழுந்தருளலும், அடியார்களுக்கு மாகேஸ்வர பூசையும் நடைபெறும்.

பிற்பகல் 2-30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் இருந்து துர்க்கை அம்பாள் புறப்பட்டு இரவு 7-30 மணியளவில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலைச் சென்றடைவார்.

ஐந்தாம் திகதி இடம்பெறும் மகாகும்பாபிஷேக விழாவின் போது இவ்வழகிய விக்கிரகத்தை உருவாக்கிய சிற்பாசிரியர் கன்னாதிட்டியைச் சேர்ந்த திரு. சின்னராசா ஆசாரி பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்படுவார். [கொ]

## இன்று

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி இல்லங்களுக்கிடையிலான நாடகவிழா இன்று ஞாயிறு மாலை கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

"கனவுகள்", "அதிர்ஷ்டம் அழைக்கிறது" ஆகிய நாடகங்கள் இன்று நடைபெறுகின்றன.

"அந்தரங்கங்கள் புனிதமானவை", "அதுவும் ஒரு கௌரவம்தான்" ஆகிய நாடகங்களுடன் பழையமாணவர்களின் "ஓமனுக்குப்போன சீமான்" என்ற நாடகம் நாளை திங்கட்கிழமை நடைபெறுகிறது. [இ]

∴ ∴ ∴

[யாழ்ப்பாணம்]

வண்ணை சிவன்கோவிலில் இன்று காலை 6 மணிக்கு ஆனி உத்திர நடேசர் அபிஷேகம் நடைபெற்று சுவாமி வீதி வலம்வருவார். [இ]

## வசதிக்கட்டண தற்காலிக — ஆசிரியர் விபரங்களை கல்வி அமைச்சு கோருகிறது

[யாழ்ப்பாணம்]

அரசாங்க பாடசாலைகளில் வசதிகள் சேவைகள் கட்டணத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் விபரங்களை கல்வியமைச்சு பிராந்திய கல்வியதிபதிகளிடம் கோரியுள்ளது.

இவ்வாண்டு மே மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் வசதிகள் சேவைகள் கட்டணத்தில் நியமனம்பெற்ற ஆசிரியர்களின் விபரங்களையே கல்வி அமைச்சு சேகரித்து வருகிறது.

இந்த ஆசிரியர்களது எதிர்கால நிலைகுறித்து ஆராயும் பொருட்டு விசேட பொதுக் கூட்டமொன்று அடுத்த ஞாயிற்றுக்கிழமை குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்சங்கத்தில் நியமனம் பெறாத ஆசிரியர்கள் திரு. மு. க. சுப்பிரமணியம், இளைப்பாறிய அதிபர், குரும்பசிட்டி, தெல்லிப்பழை என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம் என்று இச்சங்கம் கோரியுள்ளது. [கெ. இ]

## காணி விலை அதிகரிப்புக்கு காரணம் என்ன?

### அமைச்சரவை உபகுழு அறிக்கை

[கொழும்பு]

தனியாருக்குச் சொந்தமான வீடுகளிலும் அரசாங்க விடுதிகளிலும் அரச திணைக்களங்களின் அலுவலகங்கள் இயங்கி வருவதனாலேயே நாட்டில் காணிவிலையும் வீட்டு வாடகையும் அதிகரித்துள்ளது.

எனவே இந்நிலையை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு அமைச்சரவை உபகுழு ஜனாதிபதிக்கு சிபார்சு செய்வதுள்ளது.

காணி விலை அதிகரிப்புக்கான காரணங்களை ஆராய்ந்து அறிவதற்காக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அமைச்சரவை உபகுழுவை அண்மையில் நியமித்திருந்தார்.

முடிக்குரிக்காணிகளை காணி காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டும் என்றும் இக்குழு தமது அறிக்கையில் தெரிவித்திருந்தது. [கி-இ]

## யாழ். சைக்கிள் திருட்டு:

# தேடப்பட்ட சந்தேகநபர் பொலிஸில் சரண்!

[யாழ்ப்பாணம்]

சைக்கிள் திருட்டுக்கள் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டுவந்த நபர் ஒருவர் பொலிசில் சரணடைந்துள்ளார்.

அண்மையில் பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அருளம்பலம் சிவதாஸ் என்பவரைக் கைது செய்து விசாரணை நடத்திய பொலிசார் அவரால் களவாடப்பட்டு விற்கப்பட்டதாகக் கூறப்படும் 20 சைக்கிள்களை கைப்பற்றினர். இத்திருட்டுக்கள் தொடர்பாக நாகராசா [கிளி], துரைரத்தினம் ஆகியோரைப் பொலிசார் தேடிவந்தது தெரிந்ததே.

நேற்று முன்தினம் பொலிசில் சரணடைந்த நாகராசாவை விசாரணை செய்த யாழ் குற்றத்தடுப்பு பொலிஸ் கான்ஸ்டபிள்களான எஸ். ஜோர்ஜ், பி. மகேந்திரன் எஸ் குணரத்தினம் ஆகியோர் மேலும் எட்டுச் சைக்கிள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

சிவதாஸ் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். [கொ-கு]

## எம்.ஜி. ஆர் - அர்ஸ் சந்திப்பு

பெங்களூர், ஜூன் 30

தமிழக முதலவர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் இன்று பெங்களூரில் கர்நாடக முதல்வர் திரு. தேவராஜ் அர்ஸைச் சந்தித்து உரையாடினார்.

இதஒரு சம்பிரதாயபூர்வ சந்திப்பு என்று திரு. எம் ஜி. ஆர். பின்னர் நிருபர்களிடம் கூறினர். [இ]

## தவறுன...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டதால் யாழ் வைத்தியசாலைக்கு திரு. சசி கிருஷ்ணமூர்த்தி என்பவரின் உதவியுடன் கொண்டுசெல்லப்பட்டு அங்கு 15ம் வார்ட்டில் டாக்டர் சுதந்திரநாதனால் சிகிச்சையளிக்கப்பட்டார். அங்கும் சைக்கிள்விபத்தில் அகப்பட்டதாகவே தெரிவித்த திரு மஞ்சுசிறி மறுநாள் காலையே வைத்தியசாலையிலிருந்து சென்றார் என்பதே உண்மைநிலை என்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். [இ]

## யாழ்.நகர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரத்ன ஆகியோரும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

அமைச்சர் நேற்றுமாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் கைதடி சைவச் சிறுவர் இல்ல நிதிக்காக சென்னை நுண்கலைக் கல்லூரி அத்தியட்சகர் "பரதசூடாமணி அடையாறு ஸ்ரீ சே லக்ஷ்மணனின் மாணவி குமாரி ஜெயகௌரி நகுலேந்திரனின் பரதநாட்டிய நிகழ்ச்சியிலும் விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## இன்று

அமைச்சர் இன்று தொல்பொருள்துறை வடபிராந்திய அதிகாரி திரு. பா.பொ.செல்வரத்தினத்துடன் யாழ் நூதனசாலையையும், நாவலர் நினைவு மண்டபத்தையும் புதிய நூதனசாலை கட்டிடத்தையும் பார்வையிட்டு மதிப்பீடுசெய்வார்.

கந்தரோடை தொல்பொருள் நிலையத்தைப் பார்வையிட்டபின் அமைச்சர் மாலை கொழும்பு திரும்புவார். [கொ-இ]

## புதிய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயிகளும் புகைப்படத்திற்கான செலவு 3ரூபா 75 சதத்தை கமநலசேவை நிலையத்திலோ அல்லது தங்கள் பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தரிடமோ செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெறுமாறும் யாழ். மாவட்ட கமநலச்சேவை இலாகா உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

ஏற்கனவே வழங்கப்பட்ட விவசாய அடையாள அட்டைகள் ரத்துச் செய்யப்படும். விவசாய அடையாள அட்டை உள்ளவர்களுக்கு மாத்திரமே குறைந்தவிலையில் பசளை, விவசாய உபகரணங்கள், காப்புறுதி நட்டஈடு, விதை பொருட்கள் போன்ற வசதிகளும் செய்துகொடுக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார். [கு]

## அமுதசுரபி அன்னதானவிழா

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் இருபதாவது ஆண்டு ஆரம்பவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் மேற்படி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்னதான விழாவை அரஸ்கோ தொழில் ஸ்தாபனங்களின் நிர்வாக இயக்குநர் திரு இ. அரசரத்தினம் ஆரம்பித்துவைப்பார்.

## வேலைக்காரச் சிறுவன் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

எசமானுக்குப் பயந்த மலைநாட்டு வேலைக்காரச் சிறுவன் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலைசெய்துகொண்டாராம்

வேலணையைச்சேர்ந்த 15 வயதான வேலரசு என்ற மலைநாட்டுச்சிறுவனின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எம். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

இச்சிறுவன் விஸ்வலிங்கம் என்பவர் வீட்டில் வேலை பார்த்து வந்ததாகவும் மாம் எரிவதை மரத்தில் ஏறிப் பார்த்துக்கொண்டிருந்தத சமயம் எசமானான விஸ்வலிங்கம் அங்கு வரவே, அவரைக் கண்டு பயந்த சிறுவன் ஓடோடிச் சென்று நச்சுத் திராவகத்தை எடுத்துக்குடித்ததாக விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## கடையில் கப்பம் கேட்டு கலாட்டா செய்தனராம்

[வண்ணார்பண்ணை]

யாழ்ப்பாணம் சுண்டிக்குளிப் பகுதியிலுள்ள கடை ஒன்றில் கப்பம்கேட்டு கலாட்டா செய்ததாக யாழ்ப்பாணம் பொலிசில் செய்யப்பட்ட முறைப்பாட்டொன்றின்மீது பொலிசார் இருவரை வெள்ளிக்கிழமை கைதுசெய்தனர். இதுசம்பந்தமாக மேலும் இருவரை பொலிசார் தேடிவருகின்றனர்.

யாழ்ப்பாணம் கச்சேரி பஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள தேநீர்கடை ஒன்றிலேயே இச்சம்பவம் நடந்துள்ளதாம். கடை உரிமையாளர் பொலிஸில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்த பொலிசார் சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர்.

## அனுமதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்திற்கான பங்கீட்டுஅட்டைகளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் விநியோகம் செய்வதற்கு தயார்நிலையில் வைத்துள்ளது.

### 4 வகையில் விநியோகம்

பெற்றோல், டீசல் ஆகியவற்றை விநியோகிப்பதற்கு வாகனங்கள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

தொழில் சம்பந்தப்பட்ட வாகனங்கள், வர்த்தக வாகனங்கள், தனிப்பட்ட வாகனங்கள் வாடகை வாகனங்கள் என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு பெற்றோல் டீசல் விநியோகம் இடம்பெறும்

அடுத்த புதன்கிழமை அமைச்சரவை இது குறித்து இறுதி முடிவெடுக்கும்.

இப்பங்கீட்டுமுறை அடுத்த வாரத்தில் அமுலுக்குவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. [தி-இ]

## ஓவியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அ. அமிர்தலிங்கமும் அறிக்கை விடுத்துள்ளார். இச்சம்பவம் பற்றி அவர் ஆழ்ந்த கவலையும் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம்பற்றி யாழ். பொலிஸ் அதிபர் திரு லியோ பெரேராவுடன் தொடர்பு கொண்டபோது பின்வரும் தகவலை அவர் வெளியிட்டார்.

கடந்தமாதம் 14ம் திகதி ஓவியர் மஞ்சுசிறி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் 18ம் வார்ட்டில் இரவு 9 மணிக்குச் சேர்க்கப்பட்டது சைக்கிள் விபத்தொன்றில் அவர்காயமுற்றதாகவே அப்பொழுது தெரிவிக்கப்பட்டது. அவர் தலையில் ஒரு ஒன்றரை அங்குல காயம் இருந்துள்ளது. அக்காயத்துக்கு டாக்டரால் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. அன்று இரவு 11 மணிக்கு 15ம் வார்ட்டுக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார். அடுத்தநாள் காலையில்-ஏழு மணிக்கு வார்ட் தாதியால் அவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அப்போது அவரது வெளிநாட்டு நண்பர்கள் இருவரும் அருகில் இருந்துள்ளனர். இதுபற்றி ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவுக்கு 8-30 மணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 9-30 மணிக்கு ஆஸ்பத்திரி பொலிசார் அவரை விசாரிப்பதற்காகப் போயுள்ளனர். ஆனால் அதற்கு முன்பதாகவே ஓவியர் தம் சொந்த விருப்பத்தில் ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறியிருக்கிறார் என்பது தெரியவந்துள்ளது. கொழும்பு பொலிஸ்நிலையத்தில் அவர் 27ம் திகதி தாம் காயமுற்றது பற்றி புகார் தெரிவித்துள்ளார்.

மஞ்சுசிறி சைக்கிளால் மோதுண்டு காயமுற்றதை நேரில்கண்ட ஒருசாட்சிஇருப்பதாகவும் யாழ் கஸ்தூரியார் வீதியில் 58ம் இலக்கத்தைச் சேர்ந்த வாஞெலி திருத்துனராயினுக்கும் கிருஷ்ணமூர்த்தி என்பவரே அவர்என்றும், காயமுற்ற ஓவியரை இவரே காரில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குஅனுப்பி வைத்துள்ளார் என்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்துள்ளார்.

## மண்கும்பானுக்கு மின்சாரம்

(வேலணை)

மண்கும்பான் பகுதிக்கு இவ்வருட முடிவிற்குள் மின்சாரம் கிடைத்துவிடும்' என்று ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் மண்கும்பான் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினர்.

## விற்பனைக்கு

அவுட்டேசட் மோட்டர் ஜோன்சன் (20) நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. பெறுமதி 1750/-நேரில் பார்வையிடலாம். M. மாலிக், S. ஜஸீமின் 49, மணிக்கூட மார்க்கட் யாழ்ப்பாணம்.

2924

## WANTED

Two Doctors M. B. B. S Preferably ladies wanted for immediate engagement to work in new nursing home at 254, Kandy Road, Jaffna. Salary negotiable, but over 2000/- Contact: K. Balendran, 'Ruby Villa'. Valvettiturai. Telephone 36, Valvettiturai. 2922

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸெல்கோவில் மேற்கு வீதி [illegible] இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8943/78 The Eelanaadu P B Box 49; Telegrams: Eelanaadu; Phone: 889.